Tamil Heritage Foundation International Digital Library EBook collection

உ நாடார் குல மித்திரன். 1927 ௵ நவம்பர் ௴ 14 ௳

# மாயவாழ்வு.

ஸ்ரீ அ. கு. அண்ணுமலை எழுதியது.

## 3-வது அத்தியாயம்.

நல்லோனுக்குவரும் பொல்லானுக்குவதும் சேர்க்கை வாசனையே. எவ்வளவு தூயவனுயிருந்தாலும் தீய சேர்க்கை அவனைத் தீயோனுக்கிவிடும். சுத்த ஜலம் உப்போடு சேர்ந்தால் எப்படி உப்புஜலமென்ற பெயரை அடைகிறதோ அப்படியே மனிதனின் தன்மையுமாம். அவ்விதச் சேர்க்கையின் தன்மையால் வாழ்ந்தவன் தாழ்ந்தும் தாழ்ந்தவன் வாழ்வதுமுண்டு. இத்தாழ்விற்கும் வாழ்விற்கும காரணம் ஏதெனிலோ தீயதூய சேர்க்கையின் பாற்பட்டதாம். கழுதையோடு சேர்ந்த கன்றும் அமேத்தியம் தின்னுமென்பதொரு பழமொழி. ஒநடங்கு ஓசியைஇச்சிப்பதானது இநடந்த செலவை உண்டாக்கும். முதலில் ஒரு சிறிது பொடியும் ஒரு சிகரட்டும் மைனருக்குக் கொடுத்ததினுல் நாடக நண்பர்களுக்கு மைனர் பணங்கள் தாராளமாகச் செலவு செய்யக்கிடைத்தது. கெட்ட சகவாசம் முதலில் சுகமய சந்தோஷம்போல் தோன்றினுலும் பின்னுல் ஜீவியகாலம் முழுதும் துக்கமயமே. மீன் தூண்டிலிலிருக்கும் விட்டில் பூச்சிக் காசை வைத்துத் தன் சரீரத்தையே இழப்புதுபோல தீயோர் தொடர்பு.

1-வது அத்தியாயத்தில் நாடக நண்பர்கள். கமலாம்பாள் சதியோலோசனைப் பிரகாரம் சகல ஆபரணங்களோடும் பணத்தோடும் மைனரைக்கொண்டு போய் அவளிடம் ஒப்படைத்துவிட்டு, பேசியதொகையை பெற்றுச்சென்ற அச்சூழ்ச்சியான மோசடியைப்பற்றி மைனர் நாடக நேசர்களிடம் இம்மியும் ஐயங்கொள்ளவில்லை. ஆனுல் மையலே மிகவும் கொண்டாரென்போம். முதல் அத்தியாயத்தில் குறிப்பிட்டவாறு அன்றிரா நடுநிசியில் கமலாம்பாளால் ஜெயிலையடைந்த செல்வச்சீமான் வீட்டு மைனர் போலீஸுக்குக்கைம்மாறு செய்து தப்பிக்கலாமாவென்று எண்ணியும் கையில் ஒரு பைசாவேனுங் கிடையாது. நாளை மிகுதியாய்ப் பணந்தருகிறேனென மைனர் கடன்கூறியும் போலீஸ் காது கொடுத்தார்களில்லை. கமலாம்பாள் விஷயத்தில் இரங்கியவர்களிடம் மைனர் சொல் என் ஏறவில்லையென்ற சந்தை நிகழலாம். ஏனெனில் கமலாம்பாளின் சகாயத்தாலும் அவள் தயவு தேவையாயிருப்பதாலும் போலீஸ் சம்மதிக்கவில்லை. இவனுக்கு போலீஸ் உத்தியோகம் கிடைத்ததே அவளால்தான். காரணம் கமலாம்பாளுக்கு பல பெரிய மனுஷர்கள் தயவுண்டு. மேலும் முன்னரே அவளானாய்விட்டனர். நியாயந்தீர்க்கவரும் வழக்காளர் இருவர்களிடம் பிரதிவாதிக்குத் தெரியாமல் வாதியிடமும், வாதிக்குத் தெரியாமல் பிரதிவாதியிடமும் வலக்கையையும் இடக்கையையும் நீட்டி, கடைசியில் கனமேறியவுடன் இருகையையும் பொருத்திவிட்டு கைக்கு மரியாதை செய்த வழக்காளர்களை வெண்ணிலையில் விடும் பஞ்சந்தீர்க்க வெழுந்த சில பஞ்சாயத்தார் தன்மையை நோக்கும்போது, பல பெரிய மனுஷர்கள் தயவு கொண்டகள்ளிகமலாம் பாளுக்குமனமாரத்துரோகம்செய்ய நினையாத போலீஸ் நெஞ்சங்குறித்து நாம் மகிழவேண்டியிருக்கிறது.

தட்டிச்சொல்ல ஆளில்லாவிட்டால் தம்பி சண்டப்பிரசண்டன் என்பது போல் பெரியாளில்லாக்குறைவால் மைனருக்குத் தினமும் வீண் செலவுக்கு பணம் வந்துகொண்டேயிருந்தது. தீயோர் சேர்க்கையிலிருந்தே ஏநுவநந்த கேட்டகாலந் தோன்றியிருக்கிறதென்பது அறிதறி. மைனரையடைத்த ஜெயிலில் போலீஸ் குடிவெறியால் தன் உடைவாளை தவறிப்போட்டுவிட்டான். அச்சமயம் மைனரு மதைக் கவனிக்கவில்லை. மைனர் கவனித்திருந்தால் கெட்ட சேர்க்கையின்—கெட்ட காலத்தின்—காரணமாக போலீசுக்கு எமலோகச் சீட்டு வாங்கிக் கொடுத்தே யிருப்பார்.

மறுநாள் சூரியோதயகாலத்தில் ஜெயில் காவலாளனொருவன் ஜன்னல் வழியாக மைனரைக்கவனித்தான். துக்கமும் நகைப்புமொரே நோத்தில் உதித்தன. ஏதோ ஒரு பழைய நினைவு தோன்றியவனுய் சிந்தனையில் ஆழ்ந்து மைனர் பக்கத்தில் ஜன்னலண்டை சென்றான். முன்னர் கண்டதாக நினைவு கொண்டு அறிந்தவனல்லவோ வென உறுதிகொண்டான். மைனரின் பத்தாவது வயதில் இக்காவலாளி மைனரின் வீட்டில் குமஸ்தாவாக இருந்த ஞாபகம் மைனருக்கு வர இவன் இன்னுரென்று அறிந்துகொண்டான். இருவரும் பழைய விஷயங்களைப் பேசினர். மைனரும் தான் ஜெயிலுக்குவந்த விஷயத்தைப்பற்றி உள்ள குட்டைவள்ளலுக்கு அர்ப்பணம் செய்துவிட்டு ஒரு கற்பனைக்கதை கட்டி விம்மலும் பொருமலுமாக கேட்போருள்ளம் கசிந்துருகுமாறு இயம்புவாராயினர். இவ்வாறான இருவர் நிலையும் தனது தாய் முகம் நோக்கி ஆகாரத்திற் காய்ப் பரிதபிக்கும் ஊர்க்குருவியின் நிலையொத்திருந்தது.

## 4-வது அத்தியாயம்.

இருள்! இருள்!! காரிருள்!!! மணி ஏழு. சண்டமாருதம். மேகம் குமுறுகிறது. விருக்ஷங்கள் பேயாடுகின்றன. எங்கும் தூசி பறக்கிறது. வழிகளில் மனிதர் நடமாட்டமில்லை. கள்வர்களையும் கொலைஞரையும் பிறர்க்குக்காட்டிக்கொடேனென இருள் அவர்கட்கு தைரியம் சொல்லியும் மேகம் உஜார்; அகப்பட்டுக்கொள்வாய் என்றுபயமுறுத்திக் கர்ஜிக்கிறது. ஆனுல் பெருங்காற்றோ தைரியமாய் நீங்கள் செல்லுங்கள்; நான் பிறரை வீட்டைவிட்டு வெளியேறவிடாமல் பார்த்துக்கொள்கிறேனென மண்ணை வாரி எங்கும் அடித்துக்கொண்டிருக்கிறது. இவ்வித உதவியையும் பயமுறுத்தலையும் லட்சியம் செய்யாமலொருவாலிபன் கோபத்தால் பிடரிபிடித்து உந்தப்பட்டவனுய் கண்ணில் தீப்பொறி பறக்க வாளொன்றை மறைத்துக்கொண்டு வேகமாய் சிங்கமென நடந்து சென்றான். இவரே நமது வீரமைனர். கமலாம்பாளில்லத்தை யடைந்தார். அளவுக்கதிகமாய் நாகரீக போதை வஸ்து அருந்தியிருந்தார். வீட்டினுள் நுழைந்துகொண்டே வாளையுருவினுர். அங்கு தனக்கு சிறிது தூரத்திற்கு முன் சென்று கொண்டிருந்த மாதை சட்டென வெட்டிவிட்டு வாளை விட்டுவிட்டு ஓடிவிட்டார். நமது மூடமைனர் தன்னை மோசம் செய்த கமலாம்பாளிடம் பகைமை தீர்த்துக்கொண்டேவிட்டதென் றமகிழ்ச்சியொருபுறமும் யாபார்த்துக்கொண்டார்களோ வென்ற பெருந்திகில் மறுபுறமுமிருந்து கொண்டு மைனரை வாதிக்க, திரும்பித் திரும்பிப் பார்த்துக்கொண்டே ஓடோடியும் மறைந்தார்.

மறுநாள் கமலாம்பாள் வீட்டில் நடந்த கொலை விஷயம் வெளியேறியது. பெரிய உத்தியோகஸ்தர்களெல்லாம் வந்து பார்வையிட்டார்கள். இறுதியில் கமலாம்பாளும் அவள் தாய்க்கிழவியும் கைதிகளாக விலங்குமாட்டி வாளையெடுத்த தன் மூலமாய் தாசிக்கு உதவியான போலீசையும் பிடித்து விலங்கிட்டு மைனரை அடைத்திருக்கும் அதே ஜெயிலில் அடைத்தார்கள். ஏனெனில் வேறு ஜெயிலில் காலியிடமில்லை.

தான் கொண்டுவந்து அடைத்த கைதியோடு இரண்டாம் நாளே தானுமோர் கைதியாக ஜெயிலில் அடைக்கப்பட்டதற்காகப் போலீஸ் வெட்கத்தாலும் துக்கத்தாலும் மனமொடிந்தான்.

கமலாம்பாளும் தாய்க்கிழவியும் உலகத்தைப்படைத்த குருட்டுத் தெய்வம் நிரபராதியான தங்கள் வீட்டில் கொலை நடத்திவைத்து தங்களை ஜெயிலிலும் தள்ளியதே என்று தெய்வத்தை தூஷித்துநொந்துகொண்டிருந்தார்கள். கஷ்ட காலத்தில் நம் நாட்டுப் பெண்கள் தெய்வத்தைக்கோபிப்பதும்தூஷிப்பதும் இகழ்வதும் ஒரு கடமையாகக் கொண்டிருக்கிறார்கள். மனிதர் தண்டனைக்கு விலகலாம்; கடவுள் தண்டனைக்கு யாரால் தப்ப இயலும்?

பார்த்தார் மைனர்; துடைத்தார் கண்களை; மனதிற்குள் உண்மையா! ஆ! யென்றார்; நேற்றுக்கொன்றேனேயென்றார். இன்றெப்படிவந்தாளென்றார். திருடனைப்போல் விழித்தார். கனவோவென்றார். சந்தேகத்திற்கு இடமுண்டாகுமென சமாதானப்படுத்திக்கொண்டார். திடுக்திடுக்கென அடித்துக்கொள்ளும் நெஞ்சைத் தூஷித்தார். கமலாம்பாளின் பிசாசு தான் இப்படி கிழவியையும் போலீசையும் அழைத்துக்கொண்டு நம்மைக் கொல்லவந்ததோவென எண்ணினர். ஒருகை பார்ப்போமெனத் துணிந்தார். இப்படியாகஎண்ணுதஎண்ணமெல்லாமெண்ணியெண்ணி மனம் புண்ணுகிக் கொண்டிருந்தார்.

(தொடரும்.)

# ஸத்தியதரிசனம்.

மகாத்மா காந்தி ஜீவிய சரித்திரம்.

## பாகம் 4. அத்தியாயம் 23.

### குடும்ப பரிபாலன விஷயம்.

சென்ற அத்தியாயத்தில், குடும்பச்செலவு அதிகமாக இருந்த போதிலும் எளிய வாழ்க்கையையே மேற்கொள்ள வேண்டுமென்னும் எண்ணம் மட்டும் நர்பனிலேயே தோன்றியிருந்த விஷயம் குறிப்பிட்டிருந்தது ஞாபகமிருக்கக்கூடும். ஆனுல் ஜோஹன்ஸ் பர்க்கில் ரஸ்கினுடைய உபதேசங்களுக்குப் பல தடைகள் ஏற்பட்டுவிட்டன. சாதாரணமாக ஒரு பாரிஸ்டரின் வீட்டில் எவ்வளவு எளிய தன்மையை அனுஷ்டிக்க முடியுமோ அவ்வளவையும் அனுஷ்டித்தேன். எனினும் அவசியமான சில சாமான்கள் இல்லாமல் ஒன்றையும் செய்யமுடியவில்லை. ஆகவே, என்னுடைய மாறுதல்களெல்லாம் என் சம்பந்தப்பட்டவரை மாறுதலடைந்ததே யன்றிப் புறத்திலும் மாறுதலை உண்டாக்க முடியவில்லை. எல்லா விதமான தேக உழைப்பு சம்பந்தப்பட்ட வேலைகளையும் நானே செய்யவேண்டுமென்னும் விருப்பம் எனக்கு அதிகமாகிவிட்டது. எனவே நான் என் மக்களையும் அந்த ஒழுங்கில் கொண்டுவர ஆரம்பித்தேன்.

ரொட்டிக் காரனிடமிருந்து ரொட்டியை வாங்குவதை விட்டுவிட்டு நாங்களே வீட்டில் ரொட்டியைச் சுட்டுக்கொள்ள ஆரம்பித்தோம். இவ்வாறு செய்வதற்குச் சாதாரணமாகக் கிடைக்கும் இயந்திரங்களால் அரைக்கப்பட்ட மாவு சிறந்ததென்று தோன்றவில்லை. நாங்களே மாவையும் அரைத்துக் கொள்வதால் சிக்கன மேற்படுவதுடன், சுகாதாரத்துக் கிடமானதாகவும், எளிமையானதாகவும் இருக்குமென்று தோன்றிற்று. ஆகையால் நான் ஏழு பவுன் கொடுத்து ஒரு கை இயந்திரத்தை வாங்கினேன். அதற்கு அமைக்கப்பட்டிருந்த இரும்புச் சக்கரமோ ஒருவரால் கையாள முடியாததாகவும், இருவரால் அதி எளிதில் முடியக் கூடியதாகவும் இருந்தது. எனவே நானும். ஸ்ரீ போலக்கும், என் குழந்தைகளும் அந்த இயந்திரத்தில் வேலை செய்து வந்தோம். எனது மனைவியும் சிற்சில சமயங்களில் மாவரைப்பதில் பங்கெடுத்துக் கொள்வதுண்டு. பெரும்பாலும் அவள் சமையல் ஆரம்பிக்கும் சமயத்தில் அரைக்க வருவதுண்டு. இப்போது ஸ்ரீமதி. போலக் எங்கள் குடும்பத்தில் நுழைந்தது முதல் அவரும் இவ்வேலையில் ஈடுபடுவதுண்டு. இவ்வாறு மாவரைப்பது குழந்தைகளுக்கு ஒரு நன்மை தரக்கூடிய தேகாப்பியாசமாக இருந்தது. இந்தவேலையோ, அல்லது மற்றெந்த வேலையோ நாங்களாக அவர்களுக்குக் கொடுத்ததில்லை. ஆனுல் அவர்களே காலப்போக்குக்காக அவர்களுக் கிஷ்டமானபோது வந்து மாவரைப்பதில் கலந்துகொண்டு அவர்களுக்குச் சிரமமாகத் தோற்றும்போது போய்விடுவார்கள். எனினும் பின்னுல் நான் அறிமுகப் படுத்தப்போகும் குழந்தைகள் உள்பட எல்லாக் குழந்தைகளுமே என்னுடன் கலந்து மாவரைத்ததுண்டு. எல்லோரும் திருப்திகரமாகவே இவ்வேலையைச் செய்தனர். அக்காலத்தில் சிரமத்தைக் கூறவும் வெட்கப்பட்ட பல வாலிபர்களை இப்போதும் நான் ஞாபகத்தில் கொண்டுவரக்கூடும்.

எங்கள் வீட்டு வேலைகளைக் கவனிப்பதற்காக ஒரு சேவகனை அமர்த்தியிருந்தோம். அவனும் எங்கள் குடும்பத்தைச் சேர்ந்த ஒருவனைப்போல எங்களுடனேயே வசித்துவந்தான். அவனுடைய வேலைகளிலும் குழந்தைகள் அவனுக்கும் உதவிசெய்து வந்தனர். முனிசிப்பல் குப்பைக்காரர்கள் எங்கள் கக்கூஸைச் சுத்தம் செய்துவிடுவார்கள். அதைத் தண்ணீரால் அலம்பிச் சுத்தப்படுத்தும் வேலையை சேவகனிடமிருந்து எதிர்பாராமலும், அவனுக்குக் கட்டளையிடாமலும் நாங்களே கவனிப்பதுண்டு. இவ்வேலையில் குழந்தைகள் அதிகபயிற்சிபெற்றனர். இதனுல் என் குமாரர்களுக்கு குப்பை பெருக்கும் தொழிலினிடம் வெறுப்பு ஏற்படவில்லை. மேலும் அவர்களிடம் இயற்கையாகவே நல்ல சுகாதாரத்தைப்பற்றிய விஷயங்களெல்லாம் அமைந்து விட்டன. எங்கள் வீட்டில் விசேஷமாக யாரும் காயலாவாகப் படுத்ததில்லை. எப்போதாவது யாருக்கேனும் வியாதி தோன்றுமாயின் குழந்தைகளே வைத்திய உதவியை மனமுவப்புடன் செய்வார்கள். இதனுலேயே நான் அவர்களுடைய இலக்கியக் கல்வியில் கவனமில்லாமல் இருந்துவிட்டேனென்று கூற முடியாது. எனினும் அதைத் தியாகம் செய்யவும் நான் சிறிதும் பின் தயங்கவில்லை. ஆதலின் என் குழந்தைகளுக்கும் என்னிடம் ஒரு குறை இருந்தது. அதை அவர்கள் பல முறை வாய்விட்டுச் சொல்லியு மிருக்கின்றனர். நானும் அவ்விஷயத்தில் சிறிதேனும் குற்றவாளியே என்பதை ஒப்புக்கொள்ள வேண்டியவனுக இருக்கிறேன். அவர்களுக்கு இலக்கியக் கல்வியைக் கொடுக்கவேண்டுமென்னும் விருப்பம் எனக்கும் இருந்தது. நானே அவர்களுக்குக் கற்பிக்கவும் பிரயத்தனப்பட்டேன். ஆனுல் அப்போதைக்கப்போது அதற்குத் தடைகள் ஏற்பட்டுக்கொண்டேயிருந்தன. அவர்களுக்குப் பிரத்யேகமாகக் கல்வியைப் போதிப்பதற்கும் நான் ஒன்றும் ஏற்பாடு செய்யாதிருந்ததனுல் நான் ஆபீசுக்குப் போகும்போது அவர்களையும் உடன் அழைத்துச் சென்று வீட்டுக்குத் திரும்புவதுண்டு. போகவர மொத்தத்தில் அந்தத்தூரம் 5 மைல் இருக்கும். இவ்வித நடையானது எனக்கும் அவர்களுக்கும் ஒருவித தேகாப்பியாசமாகவே இருந்தது. நான் இவ்வாறு போகும்போதும் வரும் போதும் வழியில் சம்பாஷணை மூலமாக அவர்களுக்குப் பல விஷயங்களைப் போதிப்பதுண்டு. அப்போது இந்தியாவிலேயே தங்கிவிட்ட என் மூத்தகுமாரனை ஹரிலாலைத் தவிர்த்து மற்றப் பிள்ளைகளெல்லாம் ஜோஹன்ஸ் பர்க்கில் இவ்வாறு வளர்க்கப்பட்டு வந்தார்கள். ஒழுங்கான முறையில் பிரதிதினமும் ஒரு மணி நேரமேனும் தவறாமல் நான் அவர்களுக்கு இலக்கியக் கல்வியைப் போதித்திருந்தால் அவர்களுக்கு அவசியமான கல்வியை நான் போதித்துவிட்டிருப்பேன். ஆனுல் அவர்களும் நானும் விசாரப்படும் வகையில் நான் அவர்களுக்குக் கல்விப் பயிற்சியைத் தருவதில் தவறிவிட்டேன். இவ்விதமான அவர்களுடைய குறையைப்பற்றி என் மூத்தகுமாரன் மட்டும் பல சந்தர்ப்பங்களில் என்னிடம் நேரில் கூறியிருப்பதுடன் பகிரங்கமாகப் பத்திரிகைகளிலும் எழுதியிருக்கிறான். மற்ற குமாரர்கள் அந்தத் தவறுதலை ஒரு தடுக்கமுடியாத விஷயமெனக் கருதி மன்னித்து விட்டார்கள். அதற்காக நான் மனம் நொந்துகொள்ளவில்லை. ஆனுல் நான் முன்மாதிரியான தந்தையாக இருக்கத் தவறிவிட்டேன் என்பதற்காகத்தான் சிறிது வருத்தப் படுகிறேன். ஆனுல் சமூக ஊழியத்தையே நான் சிறந்ததாகக் கருதியபடியால் அது தவறானதாக இருந்தபோதிலும், அவ்விஷயத்தில் அவர்களுக்குப் பயிற்சியைக்கொடுப்பதற்காக நான் அவர்களுடைய இலக்கியக் கல்வியையும் தியாகம் செய்தேனென்றே நான் நினைத்துக் கொண்டிருக்கிறேன். மேலும்

(இதன் தொடர்பு 7-ம் பக்கம் பார்க்க.)

Tamil Heritage Foundation International Digital Library EBook collection



## கும்பகோணம்.

**நாடார் மகா ஜனங்களே!**

தஞ்சை ஜில்லா, 2-வது மகாநாட்டை கும்பகோணத்தில் நடத்துவதாக ஒப்புக்கொண்ட தங்களுடைய குலாபிமானம் பெருகி நாடார் மகாஜன சங்கம் 11-வது மகாநாட்டை வெகு சிறப்புடனும் பூரண ஜெயத்துடனும் முன் நடந்த 10 மகாநாடுகளைக் காட்டிலும் புதுமையான வழியில் நடாத்தி வைத்த பெருமைக்கு எனது மனமார்ந்த வந்தனம் செலுத்துகிறேன். மகாநாட்டின் நடபடிக்கைகள் பூராவும் ஆதிமுதல் அந்தம்வரையில் தங்களுடன் ஊழியக்காரனாக என்னை மகாஜன சங்கத்திலிருந்து கடனாக வற்றுக்கொண்டு சகல வழியிலும் எனக்குக் கௌரவம் கொடுத்து எனது குல ஊழியத்தையும் அபிமானத்தையும் பாராட்டி ஏகோபித்த அன்பினால் எனக்களித்த ஞாபகச்சின்ன தங்க பதக்கத்திற்கும் பூரண அன்பிற்கும் எனது மனமார்ந்த வந்தனம் செலுத்துகிறேன். தங்களுக்குள்ளிருக்கும் குலாபிமானத் தூண்டுதலால் 16-வது மகாநாட்டை மறுபடியும் கும்பகோணத்தில் வைத்து நடாத்தவேணுமென்ற நோக்கங்களையும் எல்லாம் வல்ல இறைவன் பூரணஜெயம் பெற நல்லருள் புரிவாராக. அயர்ந்த நித்திரையிலாழ்ந்திருந்த கும்பகோணம் வாலிபநாடார் சங்கம் 11-வது மகாநாட்டின் அதிர்ச்சியில் விழிப்படைந்து புத்துயிர் பெற்று தனது பொருளாதார நிலையை சீர்திருத்தவும் விருத்தி செய்யவும் நடைபெறும் கிளர்ச்சி தளர்ச்சியுறாது முகமலர்ச்சியுடன் பயிற்சி யடைந்து லட்சியமடைய அபேட்சிக்கின்றேன். அன்னவர்கள் என்னுடன் பூரண ஒத்துழைப்புக்காட்டியதற்கு எனது வந்தனம் செலுத்துகிறேன்.

தங்கள் தாழ்மையுள்ள,

**எ. யம். யஸ். அண்ணுமலைநாடார்.**

---

## வியாசப்போட்டிப் பரிசு.

அடியிற்கண்ட மூன்று வியாசங்களில் ஏதாவது ஒன்றைப்பற்றி மாத்திரம் செந்தமிழ்நடையில் பொருட்சுவையுடன் எழுதும் கட்டுரைகளுக்கு முதற்பரிசு ஒரு தங்கப்பவுனும், இரண்டாவது பரிசு ரூ 5-ம் கொடுக்கப்படும். வியாசங்கள் யாவும் டிசம்பர் மாதம் 1-ம் தேதிக்குள் கீழ்க்கண்ட விலாசத்திற்கு அனுப்பப்படவேண்டும். வியாசங்கள் பூராவும் "இந்திய கேசரி"க்கே உரியன. மற்றும்விபரம் வேண்டுவோர், பத்திராதிபர் "இந்தியகேசரி" தெஹிவெலை, இலங்கை என்ற விலாசத்திற்கு தெரிவிக்கவும். வியாசங்களாவன:- 1. புகழேந்தி அல்லது ஔவை; இவர்களில் ஒருவரைப்பற்றி எழுதி, அன்னாரின் கவித்திறமையை அவரியற்றிய கவிகளால் விளக்குக. 2. பாரததேசத்தில் கற்புக்கரசியாக விளங்கிய ஓர் மாது சிரோமணியின் ஜீவிய சரித்திரத்தைச் சுருக்கி எழுதவும். 3. சுவாமி விவேகானந்தர் அல்லது சுவாமி ராமகிருஷ்ண பரம ஹம்சர்; இவர்களில் ஒருவரின் சித்தாந்தத்தைப் போதனையாக எழுதவும்.

---

## காற்றுத் திசையறிதல்.

கிரைடான் ஆகாய விமானத் திடரின் கோபுரத்தின் மீது ஒரு நூதனக் கருவி அமைக்கப்பட்டிருக்கிறது. அதற்கும், அடிப்புறத்திலுள்ள ஓர் அறையில் வைக்கப்பட்டிருக்கும் பற்பல விதமான எழுது கோல்களுக்கும் சம்பந்தம் ஏற்படுத்தப் பட்டிருக்கிறது. மேலேயுள்ள கருவியின் உதவியைக் கொண்டு அடியிலுள்ள எழுதுகோல்கள் வெளியில் அடிக்கும் காற்றின் வேகத்தையும், அதன் திசையையும் அங்குள்ள குறிப்புக் காகிதங்களில் சரியாகப் பதிந்து வைத்து விடுகின்றனவாம். அக்குறிப்புக்களைப் பார்த்தவுடன் காற்றின் வேகம் எவ்வளவென்றும், அஃது எத்துணை அடிக்கடி வீசுகிறதென்றும் உடனே தெரிந்து கொள்ளலாம். இங்கிலாந்திலிருந்து ஐரோப்பா கண்டத்துக்குப் பறந்து செல்லும் ஆகாய விமான ஓட்டிகளுக்கு இதனால் அதிகப் பிரயோஜனம் உண்டென்று கருதப்படுகிறது.

---

## ஓர் எச்சரிக்கை.

"திருப்பூர், கம்போடியா பருத்தி விபசாயம், & கதர் உற்பத்தி கம்பெனி (லிமிட்டெட்)"பங்குகள் சேர்ப்பதற்காகக் காந்தி பெயராலும் கதர்பெயராலும் விளம்பரங்கள் வெளியிட்டுக் கொண்டிருக்கின்றது. விசாரணையின் பேரில் இக்கம்பெனி கதர் அபிவிர்த்தி வேலையிலீடுபட்டிருப்பதா யில்லையென அறியலானேன். இதையாதரித்து அபிவிர்த்தி செய்பவரென்பாரில் ஒருவராவது கதர் வேலைமாட்டு அறிவும் அனுபவமும் உள்ளவரல்லர். வேளாண்மையில்லா நிலங்களுடைய சில நபர்களுக்கு இதன் காரணமாய் வேளாண்மை நடைபெற்று வாட்டுமென்னும் நோக்கத்துடன் இது ஸ்தாபிக்கப்பட்டதாகத் தெரிகிறது. சமீப காலத்திற்குள் இக்கம்பெனி கதர் உற்பத்தி செய்து விடுமென அனுமானிப்பதற்கொன்றுமில்லை. இக்கம்பெனி "அகில இந்திய நூற்போர்சங்க"த்தாரிடமிருந்து ஏனைய கதர் உற்பத்தி கம்பெனிகள் போன்று நற்சாக்ஷிப் பத்திரம் பெற்றிருக்கவுமில்லை. ஆகையால் பொதுஜனங்கள் இக்கம்பெனியை நம்பி பங்கெடுத்து ஏமாந்துபோகாதிருக்கும்படி இதன்மூலம் எச்சரிக்கை செய்யப் படுகிறார்களென்பதாக "அகில இந்திய நூற்போர் சங்கம்" காரியதரிசி ஸ்ரீமான் எஸ். ராமநாதனவர்கள் எழுதுகிறார்கள்.

---

## உடன்குடி.

**(நமது விசேஷ நிருபரிடமிருந்து.)**

காலநிலை கதிரவன் கொடுமைசகிக்க முடியவில்லை. கிணறுகளில்தண்ணீர்ஒரு நாளுக் கொருநாள் வற்றிக் கொண்டிருக்கிறது. இரண்டொரு நாளாக வானம் மப்பும் மந்தாரமுமாக இருந்து கொண்டிருக்கிறது. ஆனால் வண்ணார் குளத்தில் தண்ணீர் சதாநேரமும் இருந்து கொண்டிருப்பது சந்தோஷப்படத் தக்கதே.

அநுவிலை. சம்பாநெல் ரூபாய் 1-க்கு படி 6½ ஆக விற்கப்படுகிறது.

யூனியன் மார்க்கெட்.யூனியன் போர்டாரால் குத்தகைக்கு விட்டு ஏலம் எடுத்திருப்பவர்கள் மார்க்கெட் வாசலில் சுங்கவரிதாரணை போர்டு இல்லாதபடி ஏழை ஜனங்களை ஏமாற்றி சுமை ஒன்றுக்கு 6-பைசாவும் ஆடு ஒன்றுக்கு 1-அணுவும் வண்டி ஒன்றுக்கு 4-அணுவும் வசூல் செய்கிறார்கள். யூனியன் சேர்மென் திருவாளர் ஸ்ரீமான் எஸ். குழந்தைசாமிபிள்ளை அவர்கள் இதைக் கவனித்து பழைய படி போர்டு பலகை போட்டு சுங்கவரிதாரணப்படி வசூல் செய்யஏற்பாடு செய்வது நலமாகும்.

---

## சிருஷ்டி மனிதன்.

நியூயார்க்கிலுள்ள வெஸ்ட்டிங் ஹௌஸ் எலெக்ட்ரிக் கம்பெனியாரால் "செயற்கை மனிதன்" என்னும் ஒரு வகை அற்புதம் வெளிக்குக் கொண்டு வரப் பட்டிருக்கிறது. இம் மனிதன் வினாக்களுக்கு விடைகூறுகிறான். ஏவப்பட்ட ஏவல்களையும் நிறைவேற்றுகிறான். இப்படிப்பட்ட மனிதனொருவனிடம் "ஸிம் ஸிமே! திற" என்று சொன்னவுடன் அம்மனிதன் தன் கதவைத் திறக்கிறான். மற்றொருமனிதன் வரிசையான விளக்குகளைக் கொளுத்துகிறான்; எலெக்ட்ரிக் பங்காவையும் திருப்பிவிடுகிறான்; ஸர்ச்லைட்டையும் திருப்பித்திருப்பிக் காட்டுகிறான். விளக்குமாற்றையும் பெருக்கும்படியாய்ச் செய்கிறான். ஓர் அடையாள விளக்கையும் கொளுத்திவிடுகிறான். இதுவரை இப்படிப்பட்ட மூன்று மின்சாரமனிதர்களே சிருஷ்டிக்கப்பட்டிருக்கிறார்கள். இவர்கள் வாஷிங்டன் தண்ணீர் குளத்தில் காவல் புரிந்துகொண்டு அடிக்கடி அக்குளத்திலுள்ள தண்ணீரின் ஆழத்தையும் குறித்துவைக்கிறார்கள். தண்ணீரின் ஆழத்துக்குத் தக்கவாறு அமைக்கப்பட்டிருக்கும் இயந்திர உதவியைக் கொண்டு டெலிபோன் சப்தம் கேட்டவுடன், அம்மின்சாரமனிதன் நீர்மட்டத்தின் ஆழத்தை அறிவிக்கிறான். என்னே இக்காலத்தின் அறிவு நூல் முதிர்ச்சி!

---

## சமாதானங்கள்.

### நாடார் குலத்தினருக்கு விஞ்ஞாபனம்.

திருநெல்வேலி ஜில்லாக் கலகத்தைப் பற்றி "ஹிந்து"வில் திவான் பகதூர் ஆர். ராமச்சந்திராவ் எழுதிய ஒரு விருத்தாந்தத்தைக் குறிப்பிட்டு "வழிப்போக்கன்" மித்திரனில் எழுதியிருந்தது, நாடார்குலத்தினருக்கு வருத்தத்தை உண்டுபண்ணிவிட்டதாக நாடார் மகாஜன சங்கக் காரியதரிசிகள் மூலம் அறிந்து விசனப்படுகிறோம். அக்குலத்தினரிடத்தில் நமக்கு விசேஷ மதிப்புண்டு. அவர்கள் வருந்தும்படி செய்ய நாம் எந்நாளும் விரும்பினதில்லை. தாம் "ஹிந்து"வில் எழுதிய விருத்தாந்தம் நாடார்களுக்கு வருத்தத்தை உண்டுபண்ணி விட்டதற்குத்தாம் வருந்துவதாக ஸ்ரீமான் ராமச்சந்திராவும் "ஹிந்து"வில் எழுதியிருக்கிறார். நாடார்கள் வருந்தும்படி செய்ய நாம் விரும்பியதில்லை.

**சுதேசமித்திரன்,**
**22-10-27.**

---

### சில தமிழ் மொழிகளின் திரிபும் பொருளும்.

மேற்படி தலைப்புடன் சென்றமாதம் 22-ந்தேதி "தமிழ்நாட்"டில் வெளிவந்த கட்டுரையில், சில வாக்கியங்கள் நமது நாடார் நண்பர்களைப் புண்படுத்துவதாயிருப்பதாக நமக்கு சில பிரபல நாடார் நண்பர்கள் எழுதி யிருக்கிறார்கள். நாடார் குலத்தாரின் அபிவிருத்தியில் நமக்கு விசேஷ சிரத்தையுண்டாகையாலும், எந்த வகுப்பாரையும் இழிவுபடுத்தும் நோக்கம் நமக்குக் கிடையாதாகையாலும்மேற்படி விஷயத்திற்காக நாம் வருந்துகிறோம்.

**"தமிழ் நாடு"**
**2-11-27.**

---

## சிவகாசி.

நவம்பர் மாசம் முதல் தெய்தியன்று சிவகாசி முனிசிபல் சேர்மன் எலெக்ஷன் நடைபெற்றது. அதில் இதற்கு முன் நாடார் ஜன சமுகத்திற்குப் பிரதிநிதியாக சென்னை சட்ட நிரூபண சபை மெம்பராயிருந்தவரும், சிவகாசி ஹிந்துநாடார் இலவச பெண்பாடசாலை மானேஜருமான ஸ்ரீமான் ப. கொ. ச. அ. ஆறுமுகநாடார் அவர்கள் யம். ஆர். ஏ. எஸ். வண்டன் யாதொரு போட்டியுமன்னியில் மெம்பர்களின் ஏகமனதுடன் சேர்மனாகத் தெரிந்தெடுக்கப்பட்டதும், இவ்வூரில் 4 வார்டுக்கு 4 மெம்பர்கள் போட்டியன்னியில் தெரிந்து எடுக்கப்பட்டதுமான விஷயம் போற்றத்தக்கது.

இவர் பாடசாலை மானேஜராயிருந்ததுபற்றி இவர் சேர்மனாகவிருக்கும் காலத்திற்குள் சிவகாசியில் கட்டாய இலவசபாடசாலை ஒன்று புதிதாய் ஸ்தாபிப்பார்களென்று எதிர் பார்க்கப்படுகிறது.

நே. பே. ஆ. மு. வேலாயுதம்.

---

## நாடார் மகாஜன சங்கம், மதுரை.

கும்பகோணத்தில் நடைபெற்ற நாடார் மகாஜன சங்கம் 11-வது மகாநாட்டின் வரவு செலவு கணக்குகளும் ரிப்போர்ட் புஸ்தகங்களும் மீதி ரூபாய் 349-14-3-ம் நமது சங்கம் டிராவலிங் ஏஜண்டு ஸ்ரீமான் ஏ. யம். எஸ். அண்ணுமலை நாடார் அவர்கள் மூலம் வந்தனத்துடன் வரப் பெற்றோம்.

மகாநாடு சிறப்பாகவும், நேர்மையாகவும் நடத்தி இனி மகாநாடு நடத்துகிறவர்களுக்கு முன்மாதிரியாக ரிப்போர்ட்டை அதி சீக்கிரமாய் முடித்தனுப்பிய உபசாரணைக் கமிட்டியார் அவர்களுக்கு நமது சந்தோஷமான வந்தனத்தைச் செலுத்துகிறோம்.

ரிப்போர்ட் புஸ்தகம் தேவையுள்ளவர்கள் அரைஅணுஸ்டாம்பு அனுப்பிப் பெற்றுக்கொள்ளலாம்.

காரியதரிசிகள்,
**நாடார் மகாஜன சங்கம்,**
221 கீழமாரட்டுத்தெரு,
மதுரை.

---

## நெல்லூர் ஜில்லாவில் சேதம்.

1-11-27 செவ்வாய்க்கிழமை நெல்லூர் ஜில்லா சுற்றுப்பக்கங்களில் அகோரமான புயல் காற்றினாலும் மழையினாலும் நேர்ந்த நஷ்டங்கள் செப்பத்தரமன்று. அன்று மாலை 3-மணிக்கு ஆரம்பித்த காற்றும் மழையும் இராத்திரி ஐந்து மணிவரைக்கும் உக்கிரம் தணியவில்லை. 40 மைல் விஸ்தீரணத்திற்கு இந்தக் காற்றினால் சிறு கிராமங்களிலுள்ள கூரை வீடுகள் பூராவும் சுவர்களிடிந்து விழுந்து விட்டன. பட்டணங்களிலுள்ள சில மெத்தைவீடுகளும் தகர்ந்து அநேக ஜனங்கள் உயிர்துறந்தனர். கிராமங்களில் மட்டும் ஆடுமாடுகள் விசேஷ நஷ்டம்; ஜனச் சேதமில்லை.

தென்மராட்டா ரெயில்வேயில் இரண்டுநாள் கல்கத்தா மெயில் தாமதப்பட்டது. தந்திக்கம்பிகள் அறுபட்டுப்போயின. ஜனங்கள் இருக்க இடமின்றியும் ஆகாரமின்றியும் திண்டாடுகின்றனர். நாட்டுவண்டிகள் மோட்டார்கள் செல்லும் ரஸ்தாக்களில் மரங்கள் விழுந்து போக்குவரத்துதடைப்பட்டது. 15 நாட்களுக்கிடையில் பழையபடி மோட்டார்கள் ஓட முடியாது என்று ஸ்ரீமான் எம். எஸ். சுந்தரநாடார் நெல்லூர் ஜில்லா பொதலக்கூரிலிருந்தெழுதுகிறார்.

---

## சுரண்டை நாடார்களின் அயர்வு.

இவ்வூரில் நம் நாடார்கள் சுமார் 800 பேர்வரையு மிருந்தும் யூனியன் போர்டு மெம்பர் ஸ்தானத்தில் நம் நாடார் அபேக்ஷகர் ஒருவராவது கிடையாது. யூனியன் ஏற்பட்டு சுமார் இருபது வருடகாலமாகியும் இது வரையும் வைஸ் மெம்பர் ஸ்தானத்திற்கு நாடார் அபேக்ஷகர் ஒருவராவது இருந்ததாகவும் தெரியவில்லை. வைஸ் ஸ்தானத்திற்கு ஒருவராவதுமுன் வந்ததாகவும் தெரியவில்லை, மற்ற வகுப்பினர்களைவிட நம்மவர்கள் சாஸ்தியாயிருக்கும் இந் நகரில் 12-க்கு 6 மெம்பராவது தேர்ந்தெடுக்கப்படலாம். யூனியன் சேர்மென் வேலையும் நமக்கே கிடைக்கும். இதை யெல்லாம் கவனிக்காமலிருக்கும் சுரண்டை மாநகரில் வாழும் நம்குல க்ஷத்திரிய உத்தமர்களுக்கு இனிமேல் நடக்கும் அடுத்த எலெக்ஷனில் இதை கவனிக்கும்படி தூண்டுதல் செய்கிறேன்.

பஞ்சாயத்துக்கோர்ட் தலைவர்தேர்தலில் மெம்பராக நம்மவர் 4 பேர்களிருந்தும், பிரஸிடெண்ட் வேலையை அந்நிய சாதியாருக்கு கொடுக்கக்காரணமென்ன? தலைவர்களின் ஒற்றுமைக்குறைவா அல்லது நம்மவர்களுக்கு ஆகாதென்ற எண்ணமா? எனவே நம்மவர்களின் முன்னேற்றத்திற்குத் தோதாயிருக்கும் பொது ஸ்தாபனங்களில் நாமும் அவசியமிருக்கவேண்டிய திருப்பதால் மேலேகண்ட இரண்டு ஸ்தானங்களையும் முக்கியமாய்க் கவனிக்கும்படி மறுபடியும் கேட்டுக் கொள்கிறேன்.

**கே. எஸ். ஆனந்ததாஸன்.**

---

## வருணாச்சிரமதர்மம் ஆரியர்க்கே உரியது.

வருணாச்சிரமதர்மம் என்னும் சொல் தமிழ் சொல்லல்ல. நம் நாட்டில் அந்நியமம் இருந்திருந்தால் நம்மொழியில் அதற்குவார்த்தை இருந்திருக்கும். சோளம் நம் நாட்டில் விளைகிறது; அதை சோளம் என்று சொல்கிறோம். ஆங்கிலேயரும் அதைச் சோளமென்றே சொல்வார்கள். ஏன்? அவர்கள் நாட்டில் அது இருந்ததில்லை. அதுபோலவே காப்பியை நம் தமிழ் மக்கள் ஆங்கிலேயர்வருவதற்கு முன்பு ஒரு பானமாக உபயோகிக்கவில்லை. அதனால் நம் தமிழ்மொழியில் அதற்கு ஒரு பெயரிடுதற்கு இல்லாமல் போயிற்று. அதனால் நாமும் அதை அந்நியநாட்டுப்பெயரால் காப்பியென்றே அழைக்கிறோம். வர்ணாச்சிரமதர்ம ஜாதி பாகுபாடு நம் தமிழ்நாட்டில் ஆரியர்கள் வருவதற்கு முன்பேயிருந்திருந்தால் நம் மொழியில் அவைகளுக்குத் தனிப்பெயரிருந்து தானிருக்கும். அன்றியும், இப்பெயர்களையும் வித்தியாசங்களையும் நாம் ஆதியில் கண்டித்து வந்திருக்கின்றோம்.

—ஈ. வி. இராமசாமி நாயக்கர்.

Tamil Heritage Foundation International Digital Library EBook collection



சாதி குலம் பிறப்பிறப்புப் பந்த முத்தி அருவுருவத் தன்மை நாம

மேது மின்றி யெப்பொருட்கு மெவ்விடத்தும் பிரிவற நின்றியக்கஞ் செய்யுஞ்

சோதியை மாத்தா வெளியையனதவிழ நிறைவான துரிய வாழ்வைத்

தீதில் பரமாம் பொருளைத் திருவருளை நினைவாகச் சிந்தை செய்வாம்.

நாடார்குலமித்திரன்

பிரபவ ஸு அற்பிசி மீ உ௰௯ உ

## மகாத்மா காந்தி தமிழ் நாட்டு விஜய சம்பூரணம்.

மகாத்மா காந்தி தமிழ் நாட்டிற்குப் பலமுறை விஜயம் செய்திருந்தாலும், தரித்திர நாராயணன் சம்பந்தமாக ஒரு முறை தமிழ் நாட்டின் பல பாகங்களுக்கும் விஜயம் செய்ய வேண்டுமென்று திருவுள்ளம் பற்றினர். முதன் முறையில் தடை யேற்பட்டு குறித்த காலந் தவறி மறுமுறையிலும் வியாதி வாய்ப்பட்டு மைசூர் சமஸ்தானத்தில் நந்தி மலையில் தமது சகாக்களுடன் தங்கிக் கொண்டார். ராஜாக்களும், பிரபுக்களும், பாமரர்களும் தாராளமாய்க் கண்டு தெரிசித்தார்கள். உடம்பு பூரண சௌகரியமானவுடனே தமது பிரயாணத்தை ஆரம்பித்து சென்னையிலிருந்து திருவனந்தபுரம், கொச்சி, மலையாளம்வரையும் பிரயாணத்தை முடித்து விட்டு ஸிலோன் பிரயாணத் தருவாயில் ராஜப் பிரதிநிதி அவசர அழைப்புக் கிணங்கி கப்பல் வழியாய்ப் பம்பாய் போய் வைஸிராயவர்களைக் கண்டு பேசி விட்டு சபர்மதி தங்கி ஸிலோன் செல்லப் போகிறார்.

தமிழ் நாட்டுப் பிரயாணத்தில் தேக பலக் குறைவால் பல விடங்களுக்கு அவர் போக முடியாமற் போய்விட்டது. ஆயினும் தமிழ் நாட்டு விஜயம் சம்பூரணமென்று தான் சொல்ல வேண்டும். தமிழ் நாட்டில் தரித்திர நாராயணனுக்காக மொத்தம் ஒரு லட்சத்து அறுபதினாயிர ரூபாய்க்கு மேல் வசூலாகி யிருப்பது குறிப்பிடத்தக்கது. இன்னும் சாவதானமாகப் பிரயாணம் செய்திருந்தாலும், பிராமணர் பிராமணரல்லாதார் வேற்றுமைக்குப்பரிகாரமாகச் சிறிது வேலை அவர் மேற்போட்டுப் பார்த்திருந்தாலும் இன்னுமிரண்டு லட்ச ரூபாய்க்கு மேல் வசூலாகி யிருக்கக் கூடும்.

கதரியக்கம் நம் நாட்டின் ஏழைகளை ரட்சிக்கக் கூடியதென்றும், அதற்கு வேண்டிய பொருளுதவியை முக்கியமாய்ச் செய்ய வேண்டியது அவசியமென்றும், தமிழ் நாட்டு ஜனங்களுக்கு நன்கு தெரிந்திருந்தாலும், மகாத்மா களங்கமற்ற ஓர் பெரிய மகானென்று பக்தி கொண்டிருந்தாலும் இம் முறைப் பிரயாணத்தில் வர்ணாச்சிரம தர்மத்தில் அவருக்குள்ள கொள்கையில் அனேகருக்கு மன வருத்தமும், பக்திக் குறைவும் ஏற்பட்டு விட்டது. அதாவது:— பால்ய விவாகம், விதவா விவாகம், தீண்டாமை இவைகளைப் பற்றி பிராமணர்களுக்கு வருத்தம். பிறப்பினால் பிராமணன் உயர்வு; பிராமணன் மகன் பிராமணனே என்பதில் பிராமணரல்லாதாருக்கு வருத்தம். அவர் நிரிகாண சுத்தியுடன் பேசினாலும், நடந்தாலும், மத்தளத்தைப்போல் இரு பக்கத்திலும் அடிபட்டுப் போனார். அடிபடும் தாளம் கேட்பவர் காதுக் கின்பந் தருவது போல் மகாத்மா காந்தி சுற்றுப்பிரயாணத்தினலேற்பட்ட அனுபவத்தினால் அவர் வாழ்க்கை இன்னும் தூய்மை பெற்று நாட்டுக்கு நலன் செய்யுமென்றே நம்புகின்றோம்.

அன்பு மதமாயிருந்த தமிழ் நாடு ஆரியக் கலப்பினால் பலமதங்களாய் பல கொள்கைகளாய் விரிந்து ஒன்று போலிருந்த ஜனங்கள் பிரிந்து அடிமைத் தனத்தில் மூழ்கிப் போய்விட்டது. மகாத்மாவின் பரிசுத்த வாழ்க்கையானது தமிழ் நாட்டின் விடுதலைக்கு ஒரு வழி காட்டியா யிருக்குமென்று நம்பிக்கை யுள்ள பெரும் பாலோர் ஏமாற்ற மடைந்து விட்டது போற் காணப்படுகிறது. காரணம், வர்ணாச்சிரம தர்மத்திற்கு அவர் சொல்கிற அர்த்தம் முரண் பட்டதாயிருக்கிறது. மனித வாழ்க்கை சீர்ப்படுவதற்கு அடிப்படையான தர்ம மிருக்க வேண்டுமென்கிறார். இருக்க வேண்டியது தான். அது நாலு வகையா யிருப்பானேன்? சர்வ ஜனங்களுக்கும் ஒரே தன்மையான தர்மமா யிருந்தாலென்ன? அவரவர் பரி பக்குவத்திற் கேற்றவாறு நான்கு படிகளிருக்க வேண்டுமென்றால் சேரற்றுக் கடைப் பிராமணன் முதற் படியிலே ஏனிருக்க வேண்டும்? பிரம்ம நிச்சய முணர்ந்த சூத்திரனையும் நாலாம் படியிலேயே ஏன் நிற்க வைக்க வேண்டும்? எத்தொழில் செய்தாலும், எம் மதமானாலும், இழி குணங் கொண்டாலும் பிராமணன் மகன் பிராமணனே; தகப்பன் சாயலை மகன் பெறுவது போல் குணத்தையும் பெறக் கூடுமென்றால், வேத வியாசனுக்குப் பிறந்த திருதராஷ்ட்ரன், பாண்டு, விதுரன் ஆகிய மூவரும் ஒரே குணமுடையவர்களா யிருந்தார்களா? அல்லது உருவங்களாவது ஒன்று போலுண்டா? திருதராஷ்ட்ரன் குருடன்; பாண்டு வியாதியஸ்தன்; விதுரன் ஸ்திரி சுகவுணர்ச்சி யற்றவன்; இம் மூவரிலொருவராவது வியாசன் உருவத்தையாவது, குணத்தையாவது ஏன் அடையவில்லை? வித்து நல்ல வித்து; நிலக் கோளாற்றினால் மடை யடி சாவியாய்ப் போனாற் போலிருக்கலாமென்றால் மீன் வலைச்சி வயிற்றில் வியாசன் பிறப்பானேன்? மனு தர்ம சாஸ்திரம் எட்டாவது அத்தியாயம் சான்றினர் பிரகாரணம் 102 வது சுலோகத்தில், மாட்டு மூலமாய் ஜீவிக்கிறவர்களாயும், வர்த்தகம் செய்கிறவர்களாயும், மிட்டாய் விற்கிறவர்களாயும், சிற்பி வேலை செய்கிறவர்களாயும், ஏவற்றொழிற் செய்கிறவர்களாயும், வட்டி வாங்கிப் பிழைக்கிறவர்களாயும் இருக்கின்ற பிராமணர்களை சூத்திரரைப் போல் பாவிக்க வேண்டும்; ஆதலால் அவர்களைச் சூத்திரரைப் போல பிரமாணம் (சாட்சியங்களில்) கேட்க வேண்டியது என்றிருக்கிறது. இந்தக் காலத்தில் மேற் கண்ட தொழில்கள் செய்யாத பிராமணன் ஒருவனாவதுண்டா? இவர்களைப் பிராமணர்களென்று கொள்ளத்தகாதென்று பிராமணர் சாஸ்திரமே சொல்லும்போது மகாத்மா சொல்லும் சாஸ்திரம் எப்படிப் பொருந்தும்?

மநு 2-வது அத்தியாயம் 168-வது சுலோகத்தில் எந்த துஜனனவன் வேதத்தை யோதாமல் வேறான அர்த்த சாஸ்திரத்தில் முயற்சி செய்கிறானோ அவன் ஜீவித்திருக்கும் போதே தன் வம்சத்தாருடன் சூத்திரனாகிறான் என்று சொல்லப்பட்டிருப்பதற்கு மகாத்மா என்ன பதில் சொல்லுகிறார்?

இவ்வாறு பல் வேறு வேற்றுமைப் பாடுகள் மிகுந்த குப்பைச் சாஸ்திரங்கள் கூறும் வர்ணாச்சிரம தர்மம் வேறு; மகாத்மா வர்ணாச்சிரம தர்மம் வேறு என்றால் பழய தர்மத்திலிருந்து இடைஞ்சல் செய்து வருகிறவர்களுக்கு எப்படி ஆதரவு கொடுக்கலாம்? புதுத் தர்மத்தைப் பிராமணர்களாவது ஒப்புக்கொண்டிருக்கிறார்களா? மகாத்மா சொல்லி விட்டாரென்று இன்னும் விசேஷ விஷத்தைச் சேர்த்துக் கொண்டு நாட்டைக் கெடுக்கும் நல்ல பாம்புகளுக்கு எப்படி பசும் பால் வார்க்கலாம்? புத்தர், சமணர், மகம்மது, கிறிஸ்து முதலிய பரிசுத்த இயக்கங்களையெல்லாம் பிராமணர் பிழைப்பினிமித்தம் நம் மறைவிலிருந்து கொண்டே அழித்ததுபோல், அழிக்க முயல்வதுபோல் காந்தி இயக்கத்தையும், காந்தி மறைவிலிருந்து கொண்டே அழித்ததும், அழிக்க முயல்வதும் மகாத்மா அறியாமற் போனது ஆச்சரியமே. தமிழ் நாட்டுப் பிரயாணம் ஆரம்ப முதல் அந்தம் வரையும் பேசின பேச்சுகளிலெல்லாம் பிராமணீயத்திற்கு ஆதரவு கொடுத்து வந்திருக்கிறார். பிராமணரல்லாத பெரியவர்கள் தாங்கள் பிராமணர்களால் படும் துன்பங்களையும், அவர்கள் செய்யுங் கொடுமைகளையும் ஒன்றேனும் விடாமல் எடுத்துரைத்தும், மலையாளத்தில் ஒரு வகுப்பாரை அடக்கி வைத்திருக்குங் கொடுமைகளை நேரில் பார்த்தும் மனமிளகாமலும் தம்முடைய கொள்கையை விடாமலும் வர்ணாச்சிரம தர்மத்தைப் பலமாக ஊன்றிப் பேசி யிருப்பதும் வருந்தத்தக்கது. பிராமணரல்லாதார் விஷயத்தில் இவ்வளவு பிடிவாதங் காட்டியதற்குக் காரணந் தெரியவில்லை.

சென்னையிற் பேசும்போது தீண்டாமையை ஒழிக்க வேண்டுமென்ற இந்தக் காலத்தில் இன்னுமொரு புதுத் தீண்டாத ஜாதியை உற்பத்தி செய்து விடாதீர்கள் என்று சொல்லி யிருப்பதை நோக்குங்கால், பிராமணர்கள் பூர்விக தமிழர்களையெல்லாம் ஒதுக்கி தீண்டாதவர்களாய்ச் செய்து வைத்திருப்பது போல் பிராமணரல்லாதாரெல்லாம் ஒன்று சேர்ந்து கொண்டால் பிராமணர்கள் தீண்டாதவர்களாய்ப் போய் விடுவார்களே யென்ற பயமாயிருக்கலாமோவென்ற அனுமானத்திற்கிடமுண்டாகிறது. கர்மம் அப்படி யிருந்தாலுமிருக்கலாம். அதற்கு நாமென் செய்வது? இந்தியாவில் தீண்டாமையை விதைத்தோம்; ஆப்பிரிக்காவில் அதை அனுபவிக்கிறோமென்று அவர் தானே சொன்னார். ஆகையால் பிராமணர்கள் செய்த கொடுமைகளை அவர்கள் அனுபவித்துத் தானாக வேண்டும். அதை எத்தனை மகாத்மா வந்து தடுத்தாலும் விலக்க முடியுமா? இவைகளையெல்லாம் சபர்மதியில் சாவகாசமாயிருந்து கொண்டு தீர்க்காலோசனை செய்து தமிழ் நாட்டுக்குச் சரியான சமாதான மளிக்கும்படி மிகவும் வணங்கிக் கேட்டுக் கொள்கின்றோம்.

இம் முறை, மகாத்மா தமிழ் நாட்டுப் பிரயாணத்தில் எழுந்த வினாக்களும், அளித்த விடைகளும் பெரும்பாலும் பொதுவானதே ஆயினும், இடை இடையே தனி வகுப்புக் கவனிப்பேற்படவும் இடமில்லாமற் போகவில்லை. முக்கியமாய் அவர் கவனத்துக்கு வந்தது ஆதித்திராவிடர், இசை வேளாளர், நாட்டுக்கோட்டை நகரத்தார், நாடார், சௌராஷ்ட்ரர், மலையாளத்தில் தீயர், ஈழுவர், நாயாடி சமுகங்களே யாம். இச் சமுகங்களைப்பற்றிக் குறிப்பிட்ட முக்கிய விஷயங்களெல்லாம் நாட்டார் நன்கு கவனிக்கத்தக்கவைகளாம்.

நாடார்களை இரண்டு ஜில்லாவில் மட்டும் பொதுக் கோயில்களின் விடாததைப் பற்றிய காரணமறியாமல் மயங்கினர்; மிகவும் மன முருகிப் பேசி வருந்தினர். காரண மறியாமல் மயங்கினதற்கு மகாத்மா மருத்துவர் ஸ்ரீமான் ராஜகோபாலாச்சாரியராவது பேட்டி கண்ட நாடார் பிரமுகர்களாவது உண்மையின் காரணங்களை எடுத்துச் சொல்லவில்லை. அவர் வருந்தியதற்குச் சாந்தியாகத் தென்னாட்டுத் தேசாபிமானிகளாவது, தேசியப் பத்திரிகைகளாவது சமாதான மளிக்கவில்லை. "ஊழியன்" மட்டும் உண்மையை அறியாமல் பாலில் விஷங் கலந்தது போல் சில வார்த்தைகள் எழுதியிருந்தது. அது தவறை உணர்த்தியும் இன்னும் உணர்ந்ததாகத் தெரியவில்லை.

முன்னொரு பிரயாணத்தில் திருநெல்வேலியில் மட்டும் நாடார்கள் சம்பந்தமாகக் காங்கிரஸ்க்காரரைக் குறிப்பிட்டு வற்புறுத்தியிருந்தார். இம்முறை ராஜபாளையம், கோயில்பட்டி, தூத்துக்குடி, திருநெல்வேலி முதலிய பல விடங்களிலும் வற்புறுத்தி யிருக்கிறார். அதைப் பற்றி காங்கிரஸ்காரர்களும், மகாத்மா காந்தி சீடர்களும் இனி என்ன செய்வார்களென்று பார்ப்போம்.

## குறிப்புகள்.

### 11-வது மகாநாடு வரவு செலவு.

நாடார் மகாஜன சங்கம் 11-வது மகாநாடு கும்பகோணத்தில் நடந்த வரவு செலவு கணக்கும் நடவடிக்கையும் அடங்கிய புஸ்தகம்ஒன்றுவரப்பெற்றோம். வரவு செலவு கணக்கை அடுத்த மித்திரனில் பிரசுரிப்பாம். இதற்கு முன்னடந்த பத்து மகாநாடுகளின்உபசாரணைக்கமிட்டியார் யாரேனும் இவ்வளவு துரிதமாக வரவு செலவு கணக்கு முடித்து அறிக்கை வெளியிட்டதில்லை. மகா நிபுணர் களடங்கிய உபசாரணைக் கமிட்டிமாருங்கூட வருஷக்கணக்கில் தாமதித்து ஒவ்வொரு

Tamil Heritage Foundation International Digital Library EBook collection

மகாநாட்டிலும் கேள்விகள் கேட்டு இடித்துரைத்ததின் பிறகுதான் ஒப்புக்கு ஒன்றிரண்டு வரியில் ஒரு சில கணக்குக் காட்டிவிட்டார்கள். அந்த வகையில்மாத்திரமல்ல,பலவகைகளிலும் கும்பகோணம் மகாநாட்டின் உபசரணைக் கமிட்டியாரை மிகவும் பாராட்டுகின்றோம். மகாநாடு இனிது நடைபெறுவதற்கு மிகவும் ஒத்தாசையாயிருந்த நாடார் மகாஜன சங்கம் ட்ராவலிங் ஏஜெண்டு நண்பர் வ. எம். எஸ். அண்ணாமலை நாடாரவர்களுக்கு உபசரணைக்கமிட்டியார் தங்கப்பதக்கம் சன்மானம் அளித்திருப்பது குறிப்பிடத்தக்கது.

## "தமிழ்நாடு" கண்ணோட்டம் சரியில்லை.

"தமிழ்நாடு" பத்திரிகையில் நாடார்களைப் பற்றி அறிந்தோ, அறியாமலோ, தனது தலையங்கத்தில் சற்றே தவறான அபிப்பிராயப் பட்டெழுதியிருந்ததை நாம் சமாதான வழியில் மீண்டுங் கவனிக்கும் வண்ணம் 17-10-27ல்வெளியான நம் மித்திரனில் தெரிவித்திருந்தோம்.

பின்னர் வெளிவந்த "தமிழ்நா"ட்டில் நாடார்களைப்பற்றி சுருதி யுத்தி அநுபோகத்திற்கு ஒத்திராத ஓர் ஆராய்ச்சிக்கட்டுரையை ஓர் முதலியார் பெயரால் வெளியிட்டிருக்கிறது.

28-10-27ல்வெளியான"தமிழ்நா"ட்டின் கண்ணோட்டத்தில் ஆதித்திராவிடர்களையும் நாடார்களையும் ஒன்று சேர்த்து இருவரையும் கோயிலுக்குள்விடாதது வைதீகத்தால் வந்த ஆபத்தென்று மாயக்கண்ணீர் வடிக்கிறது. காரணம் என்னவென்று கேட்டால் தீண்டாமையென்று சொல்வதாக வருந்துகிறது. "தமிழ்நாடு"க்குநாடார்களைப்பற்றிவருங் கண்ணீர் அன்புக்கண்ணீராயினுஞ் சரி, மாயக்கண்ணீராயினுஞ் சரி. கோயில்ப் பிரவேசத்தடை நாடார்களுக்கு மட்டுமில்லை; நாடார்களுக்குத் தென் மூன்று ஜில்லாக்களிலும் சில இடங்களிலும், மறவர்களுக்கும் கம்மாளர்களுக்கும் மலையாளத்திலும், வாணியர்களுக்கு திருச்செந்தூரிலும், வேளாளர்களுக்கு ஒரு நாடார் ஆலயத்திலும்,படையாச்சிக்குத்தென்னாட்டிலும், நாயுடுகளுக்குத் திருவண்ணாமலையிலும், ஆதித்திராவிடர்களுக்குஅநேகஇடங்களிலும், எல்லா இந்தியர்கட்கும் தென்னாப்பிரிக்கா ஸ்தலங்களிலும் தடை ஏற்பட்டிருக்கிறது. இத்தடைகளெல்லாம் தீண்டாமை என்பதால் அல்ல. வந்தது வலுத்தது; இருந்தது இளைத்தது. பாத்திய வழக்குப் பெருத்தது. இளைத்தவன் வர்விட்டுப் போனான். பலத்தவன் உச்சஸ்தானம் பெற்று அக்கிரம ஆசனத்திலிருந்து அடாதுடி செய்தான். அக்கொடுங் கோலாட்சி அடியோடு தொலைய சுயமரியாதைக் காந்தியில் ஈ. வி. ராம் ஜெனனமாயிருக்கிறது. அதுதான் உண்மை.

இதைவிட்டு வைதீகத்தை மட்டுங் குறைகூறி நாடார்களுக் கிரங்குவதாய்க்காட்டுங் "தமிழ்நாடு" கண்ணோட்டம்சரியில்லை.

## பெண்கள் நாயகத்தின் வெற்றி.

பெண்கள் நாயகமாகிய டாக்டர் முத்து லட்சுமி அம்மாளவர்களால் சென்னைச்சட்டசபையில் நம் நாட்டின் கோயில்களில் தேவதாசி களெனப் படுவோர், பொட்டுக்கட்டுங் கொடிய வழக்கத்லத நிறுத்தும் பொருட்டுக் கொண்டுவந்த தீர்மானம் நிறைவேறிவிட்டது. தீர்மானத்தைக் கொண்டு வந்து அவ்வம்மையார் செய்தபிரசங்கத்தில் வெகு அருமையான மதத்தின் பெயரால் மானங்கெட்ட செய்கையை மனத்திருப்தியோடு ஒரு வகுப்பார் செய்துவருவது நம்நாட்டின் துரதிஷ்டமென்று மனமுருகப் பேசியிருக்கிறார்கள்.

தீர்மானம் பெரும்பாலான ஓட்டுகளால் நிறைவேறி யிருக்குமென்று நம்பப்படுகிறது. சாதகபாதகமாய் ஓட்செய்தவர்கள் சாபிதா வெளிவரவில்லை. திரு. சத்தியமூர்த்தி ஆதரிக்கவில்லையென்று மட்டுந் தெரிகிறது. இனி சாமி வெங்கிடாசலஞ் செட்டியார் வீட்டில் சொன்னதைச் சொல்லவில்லையென்று சொல்லியது போல் சட்டசபையில் ஓட் செய்தேனென்று சாதிக்க முன்வந்தாலும் வருவார். ஐயங்காருக்கும் ஐயருக்கும் ஆழந்தெரியாமற் காலைவிடுவதும், இடந்தெரியாமற் பேசுவதும் சகசமாய் விட்டது.

## திரு. சத்தியமூர்த்தி மீது பாணம்.

வாய்வல்லாளர் திரு. சத்திய மூர்த்தி தம்முடைய வாக்குச் சாதுர்யத்தால் மெய்யைப் பொய்போலும் பொய்யை மெய்போலும் பேசுவரென்று உலகத்தார் பேசுவர். அந்த வகையில் அவருக்கு அதிக சன்மானங்களும் கிடைக்குமாம். தற்போது டாக்டர் முத்துலட்சுமியம்மாள் கொண்டுவந்த பொட்டுக் கட்டொழிக்குந் தீர்மானத்திற் கெதிர்ப் பிரசாரமாக வந்த இரண்டு தேவதாசிகளுக்கு வக்கலாத்து வாங்கிக்கொண்டு சாமி வெங்கிடாசலம் செட்டியார் வீட்டிற்குள் தாசிகள் கூட்டத்தில் வக்கீல்வாதம் செய்தார். டாக்டர் அம்மாள் சரியானபடி எதிர்வாதமும் செய்திருக்கிறார். வாதப்பிரதிவாதங்களைத் "தமிழ்நாடு" தாராளமாய் வெளியிட்டிருந்தது. அதை மறுத்து திரு. சத்தியமூர்த்தி தாம் அவ்வாறு பேசவில்லை யென்கிறார். ஆனால் "தமிழ்நாடு" லேசாய் விட்டுவிடவில்லை. சத்தியமூர்த்தி சாற்றுவது பொய் பொய்யென்றே ரூபிப்போம் என்று டாக்டர்முத்துலட்சுமியம்மாளையும் சாட்சியங் கேட்டு பொய்யென்றே ரூபித்துவிட்டது. இனி என்செய்வாரென்றுபார்ப்போம். "தமிழ்நாடு"விட்ட பாணம் அவர்மீது சுறுக்கென்று தைத்திருப்பதுடன் தேவதாசிகள் சமூகத்தார் பாணம், செங்குந்தமரபினர் பாணம், இசைவேளாளர் மரபினர் பாணம், கிறிஸ்தவ சமூகத்தார் பாணம் ஆகிய எல்லாம் நாற்புறங்களிலிருந்தும் வந்து பாய்கின்றன. இப்பாணங்களை யெல்லாம் வாங்கிக் கொண்டு அனுமானைப்போல் ஒரே மூச்சில் உதறிவிடுவாரா, குற்றுயிராய் நின்றுதவிப்பாராவென்று பார்ப்போம்.

## மாட்டு மாமிசம் சாப்பிட்டது வாஸ்தவமாம்.

நமது தேச மகாசபைத் தலைவர் ஸ்ரீமான் எஸ். ஸ்ரீநிவாசய்யங்கார் இந்து முஸ்லீம் ஒற்றுமை விஷயமாக கல்கத்தா ஒற்றுமை மகாநாட்டில் செய்த தீர்மானத்தை டில்லியில் உறுதிப்படுத்தும் பொருட்டு சில தினங்களுக்குமுன் ஒரு கூட்டத்தைக் கூட்டினார். இந்து முஸ்லீம் ஒற்றுமை விஷயமாய் திரு. ஐயங்கார் ஆங்கு நிகழ்த்திய சொற்பொழிவில் பசுபலி விஷயமாக ஒற்றுமை மகாநாடு செய்திருக்குந் தீர்மானத்தை ஒப்புக்கொள்ள வேண்டுமெனக் கேட்டுக் கொண்டு இந்துக்களுக்கு மனச்சாந்தி ஏற்படும்பொருட்டு, ஆரியர்கள் ஆதிகாலத்தில் மாட்டுமாமிசஞ் சாப்பிட்டுத்தான் வந்தார்கள் என்றார். உடனே ஹிந்து பக்தசிரோமணிகளுக்கு வந்தது கோபம்! துடித்தது மீசை!! ஐயங்கார் சொல்வது பொய் பொய் யென்று எழுந்தது சப்தம்!!! நடந்தது குழப்பம்! அப்பால் திரு. ஐயங்கார் தாம் தவறுதலாகச் சொன்னவார்த்தைகளை வாபீஸ் வாங்கிக் கொண்ட பிறகுதான் சிறிது அமைதி ஏற்பட்டிருந்தது. ஆதிகாலத்தில் ஆரியர்களை மாட்டு மாமிசம் தின்ற உண்மையை வட நாட்டில் உபதேசம் செய்த நமது திரு. ஐயங்காரவர்கள் தென்னாட்டில் கோ மாமிசம் புசிப்போரென சில வகுப்பாரைத் தீண்டாதவர்களாக மதித்துச் செய்யும் ஆர்யர் அக்ரமங்களைத் தணிப்பதற்கு இதுவரை என்ன செய்திருக்கிறார்? இயற்கையாக தமக்குள்ள சுறுசுறுப்புக் குணத்தினால் கல்கத்தாவிலிருந்து ராஜப் பிரதிநிதி அழைப்புக்கு டில்லிக்கு வந்தவர், அவரைப் பேட்டி காணுமுன்னே கண்ட பின்னே கிடைத்த நேரத்தை விருதாவாக்கி விடாமல் இந்து முஸ்லீம் ஒற்றுமை விஷயமாய் ஓர் அந்தரடித்து ஒரு விளம்பரத்தைப் போட்டுக்கொள்ளப் பார்த்தார். அவசரத்தில் பசுவதை விஷயமாய் நாக்குளறி மன்னிப்பில் வந்துவிடிந்தது. இதனால் ஆழந்தெரியாமல் ஐயங்கார் கால் விடுகிறவரென்று மகாத்மா சொன்னதும் வாஸ்தவமாகிவிட்டது.

## தொண்டர்படை.

நாடார்களுக்குள் தொண்டர்படை ஒன்று அமைக்கப்போவதாக கும்பகோணம் நாடார் கான்பரன்ஸ் பந்தலில் நாகபட்டணம் திருவாளர் எஸ். கே. இராமசாமி நாடாரவர்களால் துண்டுப்பிரசுரங்கள் வழங்கப்பட்டன. அவர்குறிப்பிட்ட நோக்கங்களை ஆதரித்து மகாநாட்டிலும் தீர்மானஞ் செய்யப் பெற்றிருக்கிறது.

திரு. நாடாரவர்கள் இது வரையும் எவ்விதமுயற்சியும் நடத்தியிருப்பதாகப் பத்திரிகை மூலமாவது துண்டுப் பிரசுரங்கள் மூலமாவது வெளியாகவில்லை. அது விஷயமாய் ஏதாவது முயற்சி நடந்திருந்தால் அது விபரத்தை மித்திரன் மூலம் வெளியிடுவாரென்று நம்புகிறேன்.

தற்காலம் தென்னாட்டிலும் வடநாட்டிலும் சுயமரியாதை யுணர்ச்சிகள் மிகுந்து பல விடங்களில் சத்தியாக்கிரஹம் நடத்தியாவது சுயமரியாதையையும் சுதந்திரத்தையும் அடைய வேண்டுமென்று முயற்சிகள் நடந்து கொண்டிருப்பதால் நாடார்மஹா ஜனங்களும் சுயமரியாதை யியக்கத்தில் ஒத்துழைத்து சுதந்திரமடைய வேண்டுமென்பதை நான் எடுத்துக் கூறவேண்டுவதில்லை.

சுயமரியாதை இயக்கத்தில் வேலை செய்வோர்க்கு வேண்டிய சில விசேஷ குணங்களும், கட்டுப்பாடும் முன் சாக்கிரதையோடு பழகி யிருக்கவேண்டிய தவசியம். அவைகளில் சில ஒன்று சேர்ந்து யோசனை செய்து முடிக்க வேண்டியதிருக்கலாம். நினைத்தமாத்திரத்தில் தொண்டர்களாகச் சேர்வோர்களைப் பழக்கப் படுத்தாமல் சத்தியாக் கிரகத்திற்கனுப்புவதால் ஒரு வேளை பலாத்காரத்தைப் பிரயோகிக்கும்படி நேரிட்டுவிடலாமாகையால் சிலகாட்களாவது ஒன்றுசேர்ந்துதொண்டர்கள் அநுசரிக்கவேண்டியவிதிப்படி பழக்கிவைத்தல் அவசியமாகும். முக்கியமாய் நாடார்கள் தங்களை அவமானப்படுத்துவதைச் சகிக்கமுடியாத குணமுடையவர்களாகையால் தொண்டர்களாகப் பழகுவதில் கொஞ்சம் அதிகநாள் சாவகாசம் வேண்டியதும் அவசியம்.

எனெனில் சத்தியாக்கிரகம் என்பது சாமான்யமான காரியமல்ல. ஒரு சத்தியாக்கிரஹி, தன்னைப் பிறர் தாக்கினாலும், வைதாலும் இன்னும் எவ்விதமாகக் கோபமூட்டப்பட்டாலும் அவ்வளவையும் சகித்துக் கொண்டு, மலர்ந்த முகத்துடனும், சகிப்புத் தன்மையுடனும், தான் எந்தக் காரியத்திற்காகச் சத்தியாக்கிரஹஞ் செய்ய முன் வந்தாரோ, அந்தக் காரியம் முற்றுப் பெறும் வரை சலியாதிருந்து வெற்றிக்காக உடல், பொருள், உயிர் எல்லாம் தத்தஞ் செய்து தொண்டாற்றுவது கடமையாகும்.

ஆகையால் நாடார்தொண்டர் படை அமைக்கப்பாடுபடும் திரு. ராமசாமி நாடாரவர்கள் கொஞ்சம் முன் கூட்டியே வேலைசெய்தால் வெற்றி நிச்சயம் கிடைக்குமென்று நம்புகிறேன்.

சமதருமவாதி.

## திருமண நன்கொடை.

நம் மித்திரன் பத்திராதிபர் ஸ்ரீமான் முத்துநாடாரவர்களின் துவிதிய புத்திரி திருவளர்செல்வி தமயந்தியம்மாளுக்கு சென்ற ஆவணித்திங்கள் 22-ந் தேதியில் மங்களகரமாய் முடிவெய்திய திருமணத்தை முன்னிட்டு, எப். எம். எஸ்ஸைச் சார்ந்த ஸெப்பாங் போஸ்ட், டெலுக்கு முறப்பா எஸ்டேட் ஸ்ரீமான் மு. வீ. குப்புசாமி நாடாரவர்கள் தம்பதிகளை ஆசீர்வதித்தனுப்பிய ரூபாய் 5—0—0—ம் பெருமகிழ்வுடன் பெற்று ஷை பணத்தை நம் மித்திரனுக்கே நன்கொடையாக வரவுசெய்து கொண்டோமென்பதைத் தெரிவித்துக்கொள்வதோடு கண்ணியப்படுத்திய அன்னாருக்கு எமது முழு மனதான வந்தனத்தைச் செலுத்திக் கொள்கிறோம்.

## செய்தித் திரட்டு.

வரும் டிசம்பர் மீ 23உ யை சுவாமி சிரத்தானந்தர் தினமாகக் கொண்டாடும்படி ஆரிய சமாஜ நிர்வாகக் கமிட்டியார் ஆரிய சமாஜிகளைக் கேட்டுக் கொண்டிருக்கிறார்கள்.

*　　　　*

ராயல் கமிஷனுக்கு அஸெஸர் ஸ்தானம் வகிக்கும்படி ஸர். ஸி. பி. ராமஸ்வாமி அய்யரைக் கேட்டதற்கு அவர் ஒப்புக்கொள்ளவில்லை யெனத் தெரிகிறது.

*　　　　*

மார்க்கரெட்டாலர் என்னும் கப்பல் சிட்டல் என்னும் இடத்திற்கு வந்தபோது அக்கப்பலில் ஏராளமான எலும்புக் குவியல்கள் கிடந்தனவாம். இரு உத்தியோகஸ்தர்களும் இறந்து கிடந்தனராம். இதற்குக் காரணம் கப்பல் வழிதப்பி 4000 மைலுக்கப்பால் சென்று விட்டதால் மனிதரை மனிதரே கொன்று தின்றுவிட்டதாகச் சொல்லப்படுகிறது.

*　　　　*

கும்பகோணம் ஸ்டாம்பு வெண்டர் சுப்பிரமணிய ஐயர் மனைவியை ஷை யூர் வக்கீல் குமஸ்தா ராமச்சந்திர ஐயரும், மாரியப்ப செட்டியும் தூக்கிக்கொண்டு ஓடிவிட்டதாக சப்மாஜிஸ்ட்ரேட் கோர்ட்டில் வழக்குத் தொடரப்பட்டிருக்கிறது.

*　　　　*

கும்பகோணம் "பாரத மித்திரன்" பத்திராதிபர், ஷையூர் "யதார்த்தவசனி" பத்திராதிபரை அவதூறு செய்ததாக வழக்கு நடந்து வாதிக்குப் பிரதிவாதி மான நஷ்டமாக ரூ 10—0—0ம் செலவு தொகையும் கொடுக்க வேண்டு தீர்ப்புச் செய்யப்பட்டது.

*　　　　*

கல்கத்தா "ஸ்டேட்ஸ்மென்" பத்திரிகை இந்து விதவைகளைத் தாக்கிய பிரசுரங்களை வெளியிட்டதாக வழக்கெடுக்கப்பட்டு கீழ்கோர்ட்டில் பத்திரிகைக்கு சாதகமாக முடிய, ஐக்கோர்ட்டுக்கு அப்பீல் செய்யப்பட்டிருக்கிறது.

*　　　　*

துருக்கியின் மொத்த ஜனத்தொகை 140 லக்ஷமெனவும் அதில் 8500,00 பேர்கள் கான்ஸ்டான்டிநோபிளில் இருக்கிறதாகவும் தெரியவருகிறது.

*　　　　*

மிஸ். மேயோவின் புஸ்தகத்தில் 5000 பிரதிகள் இந்தியா மந்திரி ஆபீஸ் வாங்கினதாக ஊர்ஜிதப்படுத்தி, மாஜி ஆங்கில உத்தியோகஸ்தர்களும், வர்த்தகர்களுமடங்கிய சங்கம் அவளுக்குப் பண உதவி செய்ததாகவும், இந்தியா கவர்ன்மெண்டு இந்தியா மந்திரி ஆபீஸ் மூலம் அவளுக்கு 5000 பவுன் கொடுத்ததாகவும் "இந்தியன் நேஷனல் ஹெறால்டு" கூறுகிறது.

*　　　　*

அம்மாப்பேட்டை அண்ணாசாமித் தேவர் குடும்பஸ்தர் ரூ 2000 நன்கொடையாகவும், ஆஸ்பத்திரி கட்டுவதற்கு ரூ 1000 பெறுமதிப்புள்ள நிலமும் கொடுத்து ஷையூரில் சுமார் ரூ 9200 செலவுடன் கட்டி முடிக்கப்பட்ட ஆஸ்பத்திரி "அண்ணாசாமி ஆஸ்பத்திரி" எனப் பெயரிடப்பட்டு கலெக்டர் எஸ், வி. ராமமூர்த்தியவர்களால் திறந்து வைக்கப்பட்டதாம். திறப்பு வைபவம் சிறப்பாயிருந்ததாம்.

*　　　　*

விருத்தாசலத்தில் சீட்டாட்டப் போராட்டத்தால் பகைமை முற்றி மாணிக்கப் படையாக்ஷி என்ற வாலிபனை மற்றொரு வாலிபன் பேனாக்கத்தியால் குத்திக் கொன்றுவிட்டு 3 வருஷம்கடுங்காவல் தண்டனையடைந்தான்.

*　　　　*

ஸர். ஸி. பி. ராமஸ்வாமி ஐயரை சென்னைக் கவர்னர் நிர்வாகசபையின் உப தலைவராக நியமித்திருக்கிறார்.

*　　　　*

லண்டனில் சலியாபின் என்பவர் பாட்டுக்கச்சேரி நடத்திவருகிறாராம். கச்சேரி ஒன்றுக்கு 12500 பவுன் அளிக்கப்படுகிறதாம். இதுவரை யாரும் இவ்வளவு பெற்றதில்லையாம்.

Tamil Heritage Foundation International Digital Library EBook collection



## "கிராமப் புனருத்தாரணம்."

மதுரை, திரு வீ மு பொன்னையா எழுதியது.

இதுகாலே, எங்களும் நகரவாழ்வே சிறந்தது எனக்கூறப்படுகிறது... நகரவாழ்வு சிறந்ததா? அன்றி நாட்டுவாழ்வு சிறந்ததா? என்பது அநுபவவாயிலாய் உணர்ந்த அறிஞர்க்கன்றோ தெரியும்? இயற்கை-எளிய-இன்பத்தை நுகரும் பேற்றை இழந்து செயற்கைப் பிணியின் வாய்ப்பட்டுழலும் இக்கால உலகிற்கு, நகரவாழ்விலும், நாட்டுவாழ்வே நல்லதாவல்லது என்று இயம்புவனேல், அஃதைப்பல்லோர் எள்ளிக்கையாடுவர் என்பதில் ஒரு சிறிதும் ஐயமின்று. எனினும், நம் நிலைகுறித்துப் பிறர் இரங்கத்தக்க தன்மையில் நாம் இதுபோழ்து வதிகிறோம். இதனை நாம் நன்கு அறிந்து கொள்ளாதிருக்கிறோம். இதனுன், வருங்கால் நம் சமூகத்திற்கு எத்துணை இன்னல்கள் உறும் என்பதை நாம் உன்னுவமேல், எவருக்கும் மனம் உருகாமலிராது என்பது திண்ணம். மேனுட்டு நாகரீக வெள்ளம், இற்றைஞான்று பரத கண்டத்தின் எல்லா மூலைமுடுக்குகளிலும் பாய்ந்து வருவதைக் கண்ணுளார் கண்டே வருகிறார். இச்சமயத்தில் அதனை எதிர்கொண்டழைத்துச் சிறப்பிப்பதே 'கௌரவ' மெனஎண்ணப் படுகிறது. இவ்வெள்ளச் சுழலில் சிக்குண்டு நத்தளிப்போர் பலர்; இதன்வேகத்திலும் ஆர்வாரத்திலும் முதலில் ஈடுண்டு, அதனோடுசென்று, பின்னர், இயற்கை தேவியின் அருளாலோ, தன் முயற்சியாலோ கரையேறியவர் பலர். இடம்பம், உலகின் உண்மை நிலையறியாமை, பொருள்வா, தன்னலம் ஆகிய பல பொருள்களைத் தன்னோடு அழைத்துக் கொண்டுவரும் இவ்வெள்ளத்தில் பலருக்குப் பலத்த மோகம் உண்டாகியிருக்கும் இக்காலத்தில், நமது அகத்தையும், புறத்தையும் தூய்மைப்படுத்தவல்ல "தாயகீர்" உண்டுஎன்று கூறின் அதன் உண்மையைச் சந்தேகியாதிருக்குமாறு வேண்டிக்கொள்கிறேன்.

நம் முன்னேர்கட்கிருந்த உடல்வலிமை நமக்குண்டா? அன்னரின் மனோ உறுதி நமக்கிருக்கிறதா? அவர்களின் அஞ்சாமை முதலிய நறுங்குணங்கள் நம்மிடை மிளிர்கின்றனவா? அவர்களுடைய ஞாபக சக்தியில்—ஆன்ம ஞான விளக்கத்தில்—ஒழுக்கத்தில் இன்னும் எத்துணை பங்கைவைத்துக் கொண்டுள்ளோம்? இவற்றிற்கு உண்டு என்று எவரும் விடையிறுக்க இயலாது. அங்ஙனமேல், நூற்றில் எத்துணையர் தம் தாழ்விற்குக் காரணம் என்ன என்பதை விசாரித்தனர்? உடல் வலிமையை ஈண்டு எடுத்துக்கொள்வோம். ஒவ்வொரு தலைமுறையினும் தேகபலம் குறுகிக்கொண்டே வருவதை ஒவ்வொரு குடும்பத்திலும் காணக்கிடக்கின்றன. பாட்டனுர், இருநூறுபவுண்டு நிறையுடையவராயிருந்திருப்பின், அவர்குமாரன், நூற்றைம்பதோடு நின்றுவிடுகிறான். அவன் மகன், நூறு பவுண்டுக்கும் குறைந்து விடுகிறான். இவனுக்கு உண்டாம் சந்ததிகள் எத்தகைய திண்மையைப் பெற்றிருக்கும் என்பதை யான் நுவலவும் வேண்டுங்கொல்? நம் நாட்டில் ஒவ்வொருவரினதும் சராசரி வயது இருபத்து மூன்று என்பது அனைவரும் அறிந்ததொன்று. நமது மூதாதையர் எண்பது ஆண்டாயினும் சிரம்நரையின்றி பல் வீழ்ச்சியுறாது—பார்வைக்குறைவின்றி—நரம்புத் தளர்ச்சியுறாது ஆரோக்கியத்துடன் இன்பவாழ்வு நடாத்தி வந்தனர். மூதாதையர் எனின் சரித்திரங்கடந்த பண்டை மக்களைப்பற்றிக் கூறவந்தேனல்லன். சென்ற நூற்றாண்டிலிருந்த மனிதர்களை எடுத்துக்கொள்ளினும் எளியேன் கூற்று வலியுறுத்தும். ஒவ்வோராண்டும் மேற்காட்டப்பட்ட அமிசங்கள் குறைந்து வருவதை ஒவ்வொருவரும் இனிதுகாணலாம். இக்காலத்திலோ, இருபத்தைந்து வயதிலேயே நரையும் மூப்பும் அதற்குரியபிறவும் தோன்றிவிடுகின்றன. முப்பதுவயதில் மூன்றுவதுகா (ஊன்றுகோ)லையும், மூக்குக்கண்ணுடியையும் தடவுகிறான். உடல் உரம் குன்றுவதான், பின்னர், உண்டாம் விளைவுகளைக் குறித்து யான் அதிகம் விரித்துரைக்க வேண்டுவதில்லை. இது நிற்க, இதுபோது நூல்கள் யாங்கணும் பெருகிவிட்டமையான், ஞாபக சக்தியும் குறைந்து வருகிறது எனக் கூறுவது மிகையாகாது. இவை தவிர, நமது நாட்டின் வறுமை பெருகிக்கொண்டு வருவது அனைவரும் அறியக்கிடக்கிறது. இவற்றைப்பற்றி விரிவுரைகூறல் அவசியத்தின் அப்பாற்பட்டதாகும்.

மேற்கண்ட குறைகட்கெல்லாம் சரியானகாரணம் என்னை என்பதைச் சிறிது ஆராய்வோம். இது ஞான்று மக்கட்கு நகர வாழ்வின் கண் பெருங்காதல் ஏற்பட்டிருக்கிறது என்பதை எவரும் மறுத்தல் அரிது. இதுவே, மேற்சொல்லப் பட்டுள்ள குறைகட்கெலாம் மூலகாரணமென்று பொதுப்படக் கூறலாம். கிராமங்களில், ஆடம்பரமற்ற எளிய இன்பவாழ்க்கையை நடாத்துவது "அநாகரீகம்" "இழிவு" என்றும், நகரங்களில், துர்மணங்களைச் சகித்துக்கொண்டு காற்றில்லாத வெளிச்சமில்லாத இடங்களில் வருவாய்க்கு மிதமிஞ்சிய குடிக்கூலி கொடுத்துக்கொண்டு வாழ்வதே "நாகரீக" மென்றும் "கௌரவ" மென்றும் நாம் கருதுகின்றோம். ஐயகோ! இஃதென்ன கொடுமை!! அறியாமை!!! பிழைக்கவழியுள்ளோன், நிலமுள்ளோன், அஃதில்லாதோன் ஆகிய சகலரும் நகரங்கட்குப் போந்தால் கௌரவமாயும், நாணயமாயும், வாழ்க்கையை நடாத்தலாம் என்று எண்ணிவிடுகின்றனர். இவற்றான் பலவித கட்ட நட்டங்கள் விளைகின்றன. முதலில் உழுதொழிலை நீண்டகாலமாய் அனுசரித்துவந்தோர், இது போழ்து அத்தொழிலை விடுத்துவருவதான் நாட்டின் விளைபொருள் அளவு அருகிவருகிறது. விளைவு குறைவாயிருக்க வாங்குவோர் மட்டும் பெருகிவந்தால், விளைபொருள்களின் விலை பெருகிவருவதில் என்ன வியப்புண்டு? நம் தேயத்தின் விளைபொருள்கள் பிறநாடுகட்கு ஏற்றுமதிசெய்யப் படுகிறதென்றும் அதைக் குறைத்தால் விளைபொருள்களின் விலையும் குறையும் என்றும் சிலர் செப்பலாம். அஃதுண்மை. ஆனுல் அதே குறிகொண்டு விவசாயத்தொழிலை அபிவிருத்தி செய்யக்கூடாதென எங்கே இயம்பப்பட்டுளது? கிராமவாசத்தை இழிவாகக் கருத வேண்டுமென யாண்டுநுவலப் பட்டிருக்கிறது? கிராமவாசத்தால் ஏற்படும் எண்ணிறந்த நன்மைகளைப் பற்றிப்பலர் சிந்திப்பதில்லை. மனிதனின் இன்பவாழ்வுக்கு இன்றியமையாது வேண்டற்பாலது தூயகாற்று. அவ்வாயு, நகரங்களில் உதாரணமாய்ச் சென்னையில் கிடைக்கின்றதோ? தூயவாயு ஒன்றைக் கருதிமட்டும் கிராமங்களில் சென்று இருப்பதோ எனச் சிலர் வினவலாம். தூயவாயுவும், சுத்த நீரும் ஒருவருடைய நல்வாழ்வுக்கு அரண் செய்யும் சாதனங்களாகும். நகரங்களில் இவ்விரண்டிற்கும் மக்கள் எவ்வளவு இன்னலுறுகின்றனர்! குப்பை மேடுகளிலும், சாக்கடை ஓரங்களிலும், வீதிக்கோடிகளிலும் பலதுன்பங்களிடையே அடிமை ஊழியஞ் செய்தேனும், பிறரின் திட்டு, அடி இவற்றைப் பொறுத்துக் கொண்டேனும் நகரங்களில் வாழ தற்காலத்தில் பலர் விழைகின்றனர். மிகுந்த பணச்செலவின்றி எளிய வாழ்க்கையைக் கிராமங்களில் நடாத்த விரும்புகின்றாரில்லை. கிராமங்களில் நாம் வேண்டுமட்டும் காற்றையும், வெளிச்சத்தையும் பெறலாம். இவைகட்கு நாம் பணஞ் செலுத்த வேண்டியதில்லை. மற்றும் கிராமங்களில் வேட்கைக்கு அடிமைபூண்டு சுயநலப் பிரியராதற்கு வழியில்லை. ஏனெனின் நகரங்களில் முக்கியமாய்ச் சென்னையில் வீதிகளில் டிராம் வண்டிகள் ஓடுகின்றன. ஆங்காங்கு சிற்றுண்டி விடுதிகள் (காபி ஹோட்டல்கள்) இருக்கின்றன. நகரவாசி யொருவன், சிறிதுதூரம் செல்ல வேண்டுமெனினும் ஓர் ஊர்தியின் உதவியையே நாடுகிறான். அத்துடன் நில்லாது சிற்றுண்டிச் சாலைகளைக் கண்டவுடனேயே அதனுட்புக இவனது மனது, இவனைத் தூண்டுகிறது. உடனே உள்ளே சென்று நான்கணுவிற்குக் குறையாமல் தின்றுவிடுகிறான். சிற்றுண்டிச் சாலைகட்குச் செல்லாதிருப்பதும், வீதிகளில் பாதசாரியாய்ச் செல்வதும் நிரம்பவும் அகௌரவமென்று நகரங்களில் கருதப்படும்போது இவன் எங்ஙனம் அவற்றை நிராகரித்திருக்கக்கூடும்? இவற்றால் பொருள்பெரிதும் செலவழிகிறது. என்வே பணத்தைத் தேட பல வழிகளிலும் பிரயத்தனப் படுகின்றான். மானம், ஒழுக்கம், சுயமரியாதை முதலியவற்றைக் காற்றில் பறக்க விடுகின்றான். பணம் சம்பாதிப்பதிலேயே இவனுடைய உழைப்பனைத்தும் செலவாகிறது. இந்நோக்கம் பலருக்கிருப்பதால், போட்டி உண்டாகிறது. எனவே, ஒவ்வொருவரும் சுயநலப் பிரியராகி விடுகின்றனர். தன் உடல், தன்வீடு, தன்பொருள் என்ற எண்ணமே மேனின்று உந்த, இவன் அவ்வெண்ணத்தைப் பூர்த்தி செய்வான் வேண்டி, எல்லா முறைகளையும் கையாளுகிறான். மனித உடல் எடுத்தது, உண்பதற்கும் உறங்குவதற்குமே என்ற குறுகிய—அறியாமையான முடிவுக்கு வந்துவிடுகின்றான். இவைகளைவிட உயரிய நோக்கங்கள் அல்லது ஊழியங்கள், மனிதனுக்கு வேறு இருக்கின்றன என்பது இவனுக்குத் தெரிவதேயில்லை. இதனுன், இவன் பிறந்தநாட்டிற்கு என்ன நன்மை? இவன் இருந்தும் ஒன்றே; இறந்தும் ஒன்றே. எளிய இடம்பமற்ற வாழ்க்கையில் இன்பமுண்டு. இவ்வாழ்க்கையிலேயே மனிதனுக்கு மன நிம்மதியுண்டாகும். கிராமங்களிலேயே இத்தகை வாழ்வை நடாத்தவியலும். இயற்கைதேவியின் அருளாட்சிக்குட்பட்டு இயற்கையேமயமாய் இலங்கும் இறைவனையடையலாம். இங்ஙனம் கூறுவதால் மூக்கைப் பிடித்துக்கொண்டு மரத்தடியில் அமரவேண்டுமென யான் கூறுவதாய் எவரும் நினையற்க. கிராமத்தில் வசிப்பது, ஒருவன் பிறந்த நாட்டிற்கும், சமூகத்திற்கும் உபகாரமாயிருத்தல் வேண்டுமென்பதே எனது உட்கிடக்கை. சுதந்திர வேட்கை ஒவ்வொருவரினது உள்ளத்தும் பொங்கி எழும்புதற்கு கிராமவாசமே சிறந்ததாகும்.

"உழுதுண்டு வாழ்வரே வாழ்வார்—மற்றெல்லாந்
தொழுதுண்டு பின் செல்பவர்"

என்ற குறட்பா ஈண்டு ஆராயத்தக்கது. உத்தியோகம் செய்வதே கண்ணியமென நினைப்பதைப்போன்ற அறியாமை பிறிதொன்றில்லை. திங்களொன்றுக்கு இருபது ரூபாய்க்கும், முப்பது ரூபாய்க்கும் தன் திரேகத்தையும், உழைப்பையும் அறிவையும் அடகுவைத்திருப்பது போன்றதன்றோ 'உத்தியோகம்' செய்வது? இஃதென்ன கௌரவம்? கிராமத்தில் சுயமரியாதைவாழ்க்கை இனிது நடாத்தலாம். இவையனைத்தும் அநுபவத்தில் இயலாது என்று சிலர் செப்பக்கூடும். இக்கூற்று ஏற்கத்தக்கதன்று. காலமழை யின்மையான் சரியானசாகுபடி செய்ய முடிவதில்லை என்றும் இதனுன் மகசூல் குறைந்து போகிறதென்றும் எனவே "வயிறுபிழைக்க" சனங்கள் நகரங்கட்குவந்து விடுகின்றன ரென்றும் சிலர் கூறக்கூடும். "காலமழையில்லை' என்பதை அங்கீகரிக்கலாம். அதனுல் ஓரளவு மகசூல் குறைந்துமிருக்கலாம். ஆனுல் இஃதொன்றே முக்கியமான காரணமா? என்பதே எளியேனது கேள்வி. நிலங்களை அபிவிருத்தி செய்யும் வழியில் தற்காலத்தவர் மிகுந்த உழைப்பு எடுத்துக் கொள்வதில்லை. நிலங்கட்கு நேராகச் சென்று கவனிப்பதும், விதை விதைக்கும் போழ்தும், அறுவடைகாலத்தும் கூட இருந்து கவனிப்பதும் 'அகௌரவ' மெனக் கிராமவாசிகளே கருதுகிறார். இதனுல் விளைவு குறைகிறது. மற்றும் விவசாயத்தை நூதன முறைகளில் அபிவிருத்தி செய்ய நம்மவர் விரும்புகிறாரில்லை. முதலில் சிறிது பொருள் செலவிடத் தயங்கிக்கொண்டு அதனுல் எப்போழ்துமே தம்வருவாயைக் குறைத்துக் கொள்கிறார். கிராமவாசத்தை இழிவெனஎண்ணியதின் பயனுய்க் குடிசைத்தொழில்களிற் பல நாசமாகிவிட்டன. இதனுல், சாதாரணமான சாமான்கட்கும், மேனுடுகளை எதிர்நோக்கவேண்டி இருக்கிறது. பண்டை நாளில் அவசியமாகவேண்டப்படுகிற குடும்ப சாமான்களில் சாதாரணமானவையனைத்தும் கிராமவாசிகளே செய்து கொடுத்து சுதேசியத்தைக் காப்பாற்றிவந்தனர். உடுக்க உடைக்கும் மற்ற சில்லரை வசதிகட்கும் இது போது நாம் அந்நிய நாட்டின் தயவை நோக்கித் தவங்கிடக்கிறோம். கிராமவாழ்வில் வெறுப்பும், நகரவாழ்வில் விருப்பும் ஏற்பட்டது மேனுட்டு நாகரீகத்தின் பயனேயாம். இதனுல், வறுமையும், டம்பமும், நோயும் பெருகலாயின. ஆதலின் இவற்றை யொழித்து இன்பவாழ்வாம் கிராமவாசத்தை நடாத்தவேண்டுமேல் "கிராமப்புனருத்தாரணம்" செய்வதே சாலச்சிறந்ததாகும். சுமார் ஐம்பது ஆண்டுகட்கு முன்னர் செல்வாக்குப் பெற்றிருந்த கிராமங்கள் இஞ்ஞான்று சீர்கெட்டிருக்கின்றன. வீடுகள் காடாகக்கிடக்கின்றன. ஒருவரிருவரிருப்பினும் அன்னர் மூடர்களாய் அறியாமைச் சேற்றைப் பூசிக்கொண்டிருக்கின்றனர். உத்தியோகம் செய்யவேண்டுமென்ற மோகத்துடன், படிப்பிற்காக வீடு, நிலம், தோட்டம் முதலியவற்றைத் தோற்றுத் தவிப்போர் எத்துணை பேர்! நகரத்தில் ஒரு வீட்டைக் குடிக்கூலிக்கு எடுத்துக்கொண்டு கிராமத்தினின்றுவரும் வருவாயைக்கொண்டு இருக்கலாம் என்ற எண்ணத்துடன் வந்து, பின்னர், தங்களின் ஆடம்பர வாழ்க்கையால் பொருளனைத்தும் விரயஞ்செய்து தவிப்போர் எத்துணை பேர்! ஆதலின் செல்வாக்குடையார், படித்தவர், கிராமப்புனருத்தாரணத்தில் உறுதியுடையார், எளிய டம்பமற்ற வாழ்க்கையில் விருப்புடையோர் கிராமங்களிற் போந்து, வாசஞ்செய்தல் வேண்டும். அவ்வளவில் நில்லாது ஆங்குள்ளோரைச் சீர்திருத்தி நாட்டுக்குப் பயன்படுமாறு நடந்துகொள்ள அன்னரைத் தூண்டுதல் வேண்டும். இதற்கெனப் பலத்த பிரசாரவேலை செய்தல் நலம். ஒவ்வொருகிராமமும் தனது தேவைகளைத் தானே பூர்த்தி செய்துகொள்ளின் இதைவிட வேறென்ன சுயராஜ்யம் நமக்கு வேண்டும்? இந்நோக்கத்தையே பிரசாரகரும் கிராமவாசஞ்செய்வோரும் கொண்டு ஊழியஞ் செய்வரேல், நமது பரத கண்டம் விரைவில் சீரடையும் என்பதில் என்னஐயமுண்டு? எழுமின்! விழிமின் !! வந்தேமாதரம் !!!

## "தமிழ் நாடு மாதர் கல்வி மகாநாடு" மதுரை.

மதுரை "மாதர் இந்திய சங்கம்" ஆதரவில் ஷை சங்கம் பிரஸிடென்ட் மிஸஸ் ஹெஸ் அவர்கள் பங்களாவில் ஓர் பொதுக்கூட்டம் கூடி மதுரையில் நாளிது நவம்பர் மீ 26 உ யில் "தமிழ் நாடு மாதர் கல்வி மகாநாடு" கூட்டுவிப்பதெனத் தீர்மானிக்கப் பெற்றிருக்கிறது. உபசரணைக் கமிட்டிப் பிரஸிடென்ட்டாக ஸ்ரீமான் வி. கிருஷ்ண நாயரவர்களின் தேவியார் தேர்ந்தெடுக்கப் பட்டிருக்கிறார். பொது ஜனங்கள் இது விஷயமாய் ஆதரவு புரியுமாறு மாதர்கள் வேண்டிக்கொள்கிறார்கள்.

இம் மகாநாட்டுக்கு பிரதிநிதிகளனுப்பப்பிரியமுள்ள தமிழ் ஜில்லாக்களின் மாதர் சங்கங்கள் தத்தம் பெயர்களை மிஸ்ஸ் அனுதாமஸ் 71. தமிழ் சங்கம் ரோடு, மதுரை என்ற விலாசத்திற்கெழுதியனுப்ப வேண்டுகிறோம். மகாநாட்டின் முழு விபரங்களும் காலப்படி அறிவிக்கப் படுமெனக் காரியதரிசி மிஸஸ் அனுதாமஸ் எழுதுகிறார்.

## நெறி தப்பினர் !

தென்னுப்பிரிக்கா இந்தியரைக் கைதூக்கச் சென்ற கனம் ஸ்ரீநிவாசசாஸ்திரியார்பாட்டைகளில் மோட்டாரோட்டித் திரிந்துவிட்டு விருந்துண்பதும் விருந்து நடத்துவதுமாகவே யிருக்கிறாராம். "பிராமண போஜனப்பிரியா" என்பது இவர் விஷயத்தில் உண்மையாகு மல்லவா? ஐயோ! இன்னென்றல்லவோ—அது சொல்லவும் நமக்கே வெட்கம். அதாவது இந்திய நாட்டில் புலால் முகரவே முகஞ்சுளிக்கும் சாஸ்திரியார் தென்னுப்பிரிக்காவில் தாம் கலந்து கொள்ளும் விருந்துகளில் நடமாடும் கோழிமுட்டைகளைக் கண்டு புன்முறுவல் கொள்கிறாராம்.

இயற்கை வனப்பு கண்டின் [புறமாந்தர்—பின்
செயற்கை வழி புக்கார் திடம்.

Tamil Heritage Foundation International Digital Library EBook collection



## தீபாவளிப் பண்டிகை.

(அருப்புக்கோட்டை, ஜீவகாருண்யப் பிரசாரசபையாரால் தீபாவளியின் போது வெளியிடப்பட்டது.)

அன்பர்களே!

நாம்கொண்ட மானிடப் பிறவியை அமைப்படுத்தி, நற்பயன் பெறுதற்பொருட்டு நமதுமுன்னோர்கள் தங்கள் வாழ்க்கையில் பல பண்டிகைகளையும், திருவிழாக்களையும் ஏற்படுத்தி தர்மம், சத்தியம், காருண்யம் முதலிய அறநெறிகள் தவறாது அவைகளைக் கொண்டாடியிருக்கிறார்கள். நமது முன்னோர்கள் தங்கள் வாழ்க்கைத் துறைகளில் செய்திருக்கும் ஒவ்வொரு காரியத்தையும் ஆராய்ந்து அறிந்தால், அதன் அடிப்படை கடவுளைக்காணும் மார்க்கத்தை நோக்கியே நிற்கின்றது. வருடத்தில் பல பண்டிகைகளும், திருவிழாக்களும் இன்னும்இதுபோன்ற சுபதினங்களும் பகுத்தறிவுள்ள மக்களாகிய நம்மைத் தீயவாழ்க்கையில் விழ்த்தாவாறு தடுத்து ஆட்கொள்ளவே ஏற்பட்டிருக்கின்றன.

இவைகளில் தீபாவளிப்பண்டிகையும் ஒன்றாகும். இத்தீபாவளித் திருநாளை நமது முன்னோர்கள் ஏன் ஏற்படுத்தினார்கள்? அதை எவ்வாறு கொண்டாடினார்கள்? என்பதை விளக்கக் கதையொன்றுண்டு.

இக்கதை அன்பர்கள் அனைவோர்க்கும் தெரிந்ததாகையால் சுருக்கமாகக் கூறுவோம். அதாவது:—

முன் ஒரு அசுரன் பாவங்கள் எல்லாம் திரண்டு உருவெடுத்தாற்போல் தோன்றி, தனது பலத்தையும், சக்தியையும், தன்மையையும், கவனத்தையும், தீயவழிகளில் செலுத்தி அக்காலத்திலுள்ள நமது முன்னோர்களை, சதாதுன்புறுத்தி, தொண்ணூற்றாறு தத்துவங்களோடு கூடிய அருமையிருந்த அவர்களுடைய உயிர்களை அவர்களின் உடல்களிலிருந்து நீக்கி, ஊனை உண்டு. எப்பமிட்டுக்கொண்டிருந்தான். இக்கொடிய அரக்கனின் கொடிய செயல்களை தினமும் பொறுக்க முடியாமல் நமது முன்னோர்கள், பகவானை நோக்கி, பக்தியாய்ப் பிரார்த்தனைகள் செய்தார்கள். அதர்மம் மேலிட்டகாலத்தில் அவதாரம் செய்யும் கண்ணபிரான், பக்தர்கள் படும் ஹிம்சையைக்கண்டு சகிக்காமல் அக்கொடிய வரக்கனைக்கொன்று மக்கள் உயிர்களுக்கு நலம் செய்தார். அத்தீய அரக்கன் இறந்த தினமே தீபாவளிப் பண்டிகையாகும்.

அவனின் அக்கிரமங்கள் ஒழிந்ததற்கு அறிகுறியாகவும், அவனைப்போன்று கொலை பாதகங்களை நாமும் செய்யாமல் அறநெறி தவறாமலிருப்பதற்கு ஓர் அடையாளமாகவும் பாவங்கள் ஓங்கி ஒழிந்து பின் புண்ணியங்கள் சிறந்ததற்கு ஒரு ஞாபகார்த்தமாகவும் நமது முன்னோர்கள் ஏற்படுத்தினார்கள். அரக்கன் ஒழிந்த ஞாபகார்த்த தினமாகிய தீபாவளிப் பண்டிகையை, நம்முன்னோர்கள் எப்படிக்கொண்டாடினார்கள் என்றால், மனதிலுள்ள தீய குணங்களைக்கொன்று நற்காரியங்களைச்செய்து தங்கள் வாழ்க்கை தூய்மை பெற, கடவுள் அருளை நோக்கினார்கள். இப்பாரமார்த்திகச் செய்கைக்கு அறிகுறியாக அன்று பாவங்கள் தொலைந்தனவென்று எண்ணெய் ஸ்நானம் செய்து புது ஆடை அணிந்து பல கார பக்ஷணங்கள்செய்து உண்டு சந்தோஷங் கொண்டாடினார்கள்.

அன்பர்களே!

இத்தீபாவளித் தினம் தற்காலத்தில் எவ்வாறு கொண்டாடப்படுகிறது? நம் முன்னோர்கள் கொண்ட கருத்திற்கு நேர்விரோதமாகவன்றோ இக்காலத்தில் நடத்தப்படுகிறது! தீபாவளித் தினம் வந்துவிட்டால், ஆடு, கோழிகள் அலறித் துடிதுடித்து உயிரிழக்கின்றன. அன்று ஆடு, கோழிகளுக்குத் திண்டாட்டமும், நமக்கு அதனால் கொண்டாட்டமாகவும் நடத்தப்படுகிறதே. இத்தீபாவளி யன்று எது முக்கியம்? உயிர்களைக் கொல்லாமையே யன்றோ!

பாவகிருத்தியங்களைத் தொலைத்ததற்கு அறிகுறியாக நமது முன்னோர்கள் ஏற்படுத்திய நாளைப் பாவ கிருத்தியங்களை உண்டாக்கும் தினமாக நாம் கொண்டாடுவது நியாயமாகுமா? ஆதியில் இப்பண்டிகை ஏற்பட்டதின் உண்மைத் தத்துவத்தையும், காரணத்தையும் ஆராய்ந்து ஒழுகாமலிருப்பது நமது கடமையாகுமா? இப்படித்தான் நமது ஹிந்துமத விழாக்களும் பண்டிகைகளும் மற்றும் சுபதினங்களும் தங்கள் உண்மைத் தத்துவங்களினின்று பிறழ்ந்து, நடத்துவதின் நோக்கமே அறியாது பிற்காலத்தில் அர்த்தமில்லாத செய்கையாகி கேலிக்கிடமாகிறது. நாம் காரணகாரியத்தைக் கைக்கொள்வதனால்தான் பிறமதஸ்தர்களும் குறை கூறுவதற்கிடமாகிறது.

ஆகவே தீபாவளி யன்று ஆடு, கோழிகளின் உயிர்க்கு உலை வைக்க வேண்டாம். கொலை மகாப்பாவமானது. உயிர்ப் பிராணிகளின் உடலிலிருந்து உயிரை அநியாயமாக நீக்கி அவைகளின் ஊனை இப்புண்ணிய தினத்தில் உண்ணுது விடுவதே நமது கடமையாகும்.

ஸ்ரீ கண்ணபிரான் கொடிய அரக்கனை இரவு 4-ம் சாமத்தில் சம்ஹாரம் செய்த தினமாகிய புண்ணிய தினம் நாளது அற்பிசிமீ 7உயாகும். அன்று இரவு 4-ம் சாமத்தில் எண்ணெய் ஸ்நானம் செய்து புது ஆடை அணிந்து அயமனதால் பகவானை நினைந்து பக்தி செலுத்தி பலகார பக்ஷணங்கள் புசித்து தீபாவளியைத் தீமை ஒழிந்த நாளாகக் கொண்டாடி இன்புறுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

---

## உலகியல்.

### தேகப்பயிற்சி மனிதர்க்கவசியம்.

காட்டுப்பாடியில் நடைபெற்ற ஆதிதிராவிடர் மகாநாட்டில் ஸ்ரீ எம். ஸி. ராஜா அவர்கள் செய்த பிரசங்கத்தில் பின் வருமாறு குறிப்பிடுகிறார்:—

நான் சமீபத்தில் வட இந்தியாவுக்குப் போயிருந்தபோது அவ்விடத்து ஜனங்கள் நம்மவர்களைப்பார்க்கிலும் அதிக பலசாலிகளாக இருக்கிறதுமல்லாமல் தங்களைத் தாமே பாதுகாத்துக் கொள்ளும் சக்தியுடையவர்களாயிருக்கிறதைக்கண்டேன். அவ்விடத்தில் சாதாரணமாய் ஒவ்வொருவரும் குஸ்தி, குத்துச்சண்டை, கோல், கத்தி, பாணு முதலிய பயிற்சியில் தேர்ந்தவர்களாயிருக்கிறார்கள். எழெட்டு வயது சிறு பிள்ளைகளுக்கும் இவ்வித பயிற்சியை கற்றுக்கொடுக்கிறார்கள்! இவ்வித பயிற்சி நமக்கும் அவசியம். ஆனபடியால் நாமும் நம் பிள்ளைகளுக்கும் இம்மாதிரி தம்மைத்தாம் பாதுகாத்துக் கொள்ளும்படியான சிலம்பு முதலிய வித்தைகளில் பயிற்சி கொடுக்கவேண்டியது அவசியமென்று எனக்குத் தோன்றுகிறது. நம்முடைய ஜனங்கள் கோயில்பட்டி, காயல் பட்டணம், திருச்செந்தூர் முதலிய இடங்களில் இப்பேர்ப்பட்ட பயிற்சிகளில் தேர்ந்திருக்கிறதை நான் நேரில் கண்டிருக்கிறேன். ஆனபடியால் நம் ஜனங்கள் குடியிருக்கும் ஒவ்வொரு இடத்திலும் தாலிம்கானு, கோதா முதலியவைகளை ஸ்தாபனம் செய்து நம் ஜனங்களுக்கு தற்காப்புக்கு வேண்டிய யுத்தவித்தைகள் பயிற்றுவிக்கும்படியாக உங்களை வற்புறுத்திக் கேட்டுக்கொள்ளுகிறேன். இதுதான் நான் உங்களுக்கு முக்கியமாய்ச்சொல்லவேண்டிய விஷயம்.

---

### பழமை போயிற்று; புதுமை வரவில்லை.

"கல்கத்தா மெடிக்கல் ஜர்னலில்" ஸ்ரீ அஷ்டோஷ்ராய் வங்காளிகளைப் பற்றி எழுதும் பின்வரும் மொழிகள் தமிழர்களுக்கும் பொருந்தும்:—

வங்காளிகள் 'கார்போஹைட் ரேட்' அதிகமுள்ள தித்திப்புப் பண்டங்களையும் அதிகமாய் உட்கொள்கிறார்கள். இதன் பயன் என்ன வெனில், எங்கே பார்த்தாலும் தொந்தி பெருத்தவர்களும் சதை போட்டவர்களும் அதிகமாய்க் காணப்படுகிறார்கள். மேற்படி உணவுப் பொருள்களிலுள்ள 'கார்போஹைட் ரேட்' என்னும் சத்து உடம்புக்குச் சக்தி ஊட்டுகிறது. ஆனால் அச்சக்தியைத் தேகாப்பியாசத்தினால் எரித்து விடாவிட்டால் அது கொழுப்பாகத் தங்கி உடம்பு ஊதிப் போகிறது. இதனால் உடம்பின் தோற்றம் விகாரமாவதுடன், உடலை உழைத்துச் செய்ய வேண்டிய வேலை எதுவும் செய்ய முடியாமலாகிறது. இது மீண்டும் உடம்பு பெருத்தற்குக் காரணமாகிறது. பண்டைநாளில் ஹிந்துக்கள் மதத்தின் பெயரால் பலவகை விரதங்களும், பட்டினிகளும் அனுஷ்டித்து வந்தனர். இவ்வழக்கம் ஜீரணக்கருவிகளுக்கு ஓய்வளித்து வந்தபடியால் தேக சுகத்துக்கு ஒரு காரணமாய் இருந்து வந்தது. மேனாட்டு நாகரீகம் வந்ததின் பயனாக, நமது மூதாதைகள் கடைப்பிடித்து வந்த சுகாதார முறைகளை நாம் கைவிட்டுவிட்டோம். ஆனால் மேனாட்டுச் சுகாதார முறைகளையும் மேற்கொள்ளவில்லை. தற்போதைய இந்தியா பண்டை இந்தியாவுமன்று; தற்கால ஐரோப்பாவுமன்று. ஆதலின் பண்டை இந்தியாவின் சுகாதார முறைகளில் சிலவற்றையும், தற்கால ஐரோப்பாவின் சுகாதார முறைகளில் சில வற்றையும் எடுத்துக்கொண்டு ஒரு புதிய சுகாதார முறையை நாம் அமைத்துக் கொள்ளவேண்டும். நமது உணவுப் பொருள்களில் தித்திப்பையும், கொழுப்பையும் குறைக்கவும், ஜனங்கள் தேகாப்பியாசத்தை அதிகமாக மேற்கொள்ளவும் தேசமெங்கும் பிரசாரம் செய்யப்படவேண்டும்.

---

### பிராமணர் ஐக்கிய மேன் கூடாது?

புரசைவாக்கம், பிராமணரல்லாதார் வாலிபசங்கத்தில் ஸ்ரீமான் ஈ. வி. இராமசாமி நாயக்கர் அவர்கள் நிகழ்த்திய சொற்பெருக்கின் ஒரு பகுதியாவது:—

சிலர் நம்மைப்பார்த்து பார்ப்பனரிடம் துவேஷம் வேண்டாம்; பார்ப்பனரும் பார்ப்பனரல்லாதாரும் கூடி ஒன்று சேர்ந்து ஜாதிக்கொடுமையை நிவர்த்திக்கவழி பாருங்கள் என்று நல்ல பிள்ளைகள் போல பேசுகிறார்கள்.

நாம் அவர்களைத் தொடுவதற்கும், ஒன்றாய் இருப்பதற்கும். உண்பதற்கும், ஒன்று சேர்ந்து கடவுளை வணங்குவதற்கும், தெருவில் நடப்பதற்கும் கூட உரிமைகொடாத அவர்களா, அல்லது நடப்பதற்கு வழிவிடுங்கள் என்று கெஞ்சிக் கேட்கின்ற நாமா துவேஷத்தை உண்டாக்குகிறவர்கள் என்பது சற்று யோசிப்பவர்களுக்குத் தோன்றாமற் போகாது. அன்றியும் ஒற்றுமையாயிருந்து துவேஷத்தை ஒழித்துக் கொள்ளக்கூடாதா என்று சிலர் சொல்லுகின்றார்கள். துவேஷம் ஒழியவேண்டுமானால் துவேஷத்திற்கு காரணமாயிருப்பவர்களிடம் ஒற்றுமையாயிருக்க முடியவே முடியாது. இன்றையதினம் நான் மாத்திரமல்ல இக்குற்றங்களை எடுத்துக் கண்டிப்பது, ஏறக்குறைய 5000, 6000 வருடங்களுக்கு முன்புள்ள தேச சரித்திரத்தைப் பார்த்தால் நமது முன்னோர் காலத்திலிருந்தே மனிதத் தன்மைக்கு விரோதமானதும், இயற்கைக்கும், சத்தியத்திற்கும் விரோதமானதுமான கொடுமைகளை ஒழித்து சமத்வத்தையும் அன்பையும் உலகின்கண் நிலை நிறுத்த நம்மவர்கள் பாடுபட்டிருப்பது விளங்காமலிராது. 5000 வருடமாக பாடுபட்டும், அதுவும் அன்புடனும் ஒற்றுமையுடனும் பாடுபட்டும் இன்னும் அப்பேய் தாண்டவமாடுமானால் இனியும் எப்படி அன்பாயும் ஒற்றுமையாயுமிருந்து இப்பொல்லாப் பிரிவினைகளை நீக்க முடியும்? என்பதை யோசியுங்கள்.

---

(7-ம் பக்கத்தின் தொடர்ப்பு.)

அவர்களுக்கு நற்குணங்கள் அமைய வேண்டிய விஷயத்தில் நான் எத்தகைய கவனத்தைச் செலுத்த வேண்டுமோ அதில் சிறிதும் தவறியதில்லை என்று மட்டும் நான் தெரிந்து கொண்டிருக்கிறேன். மேலும் ஒவ்வொரு பெற்றோரின் கடமையும் மக்களுக்கு நற்குணம் அமையும்படி கவனிக்க வேண்டியதே என்றுதான் நான் நம்புகின்றேன். நான் இவ்வாறு பிரயத்தனப் பட்டிருந்தும் அவர்களிடம் ஏதேனும் குறைகள் இருந்திருக்குமாயின் அவை என்னுடைய கவனக்குறையால் நிச்சயமாக ஏற்பட்டவையல்ல வென்றும், அவர்களுடைய பெற்றோர்களாகிய இருவருடைய குறையாகவே அவை இருக்க வேண்டுமென்றும் நான் நினைக்கின்றேன்.

குழந்தைகள் பெற்றோர்களின் தேகச் சாயல்களைப் பெறுவதேபோல் அவர்களுடைய குணநிசயங்களையும் அடைகின்றனர். அவர்களைச் சுற்றிலுமிருக்கும் சமய சந்தர்ப்பங்கள் அவர்களுடைய வாழ்க்கையின் நிலைமைக்குக் காரணமாக இருப்பதும் வாஸ்தவமேயாயினும், அவர்களுடைய குழந்தைப் பருவ முதல் அவர்களுடைய வாழ்க்கைக்கு அஸ்திவாரமாக இருக்கும் குணநிசயங்கள் அவர்களுடைய வம்ச பரம்பரையைப் பற்றியதாகவே இருக்கின்றன. சில குழந்தைகள் தாழ்ந்த பிறவிக் குணத்தினின்றும் விலகி உயர்நிலையை யடைவதையும் நான் கண்டிருக்கிறேன். அதற்குக் காரணம் அந்த ஆத்மாவுக்குச் சம்பந்தப்பட்ட பரிசுத்தமேயாகும்.

இந்தக் குழந்தைகளுக்கு ஆங்கிலக் கல்வியைக் கொடுப்பதைப்பற்றி நானும் ஸ்ரீ போலக்கும் பற்பல சமயங்களில் மிகக் கடுமையாகவும் விவாதித்திருக்கின்றோம். இந்தியக் குழந்தைகளைக் குழந்தைப் பருவம் முதலே ஆங்கிலத்திலேயே பேசவும் நினைக்கவும் பழக்கப்படுத்துகிற இந்தியப் பெற்றோர்கள் தங்களுடைய தேசத்தையும் மக்களையும் காட்டிக் கொடுத்து விடுகிறார்களென்பதே என் திடமான அபிப்பிராயமாகும். அப்பெற்றோர்கள் தங்களுடைய குழந்தைகளுக்கு நம் தேச சம்பந்தமான சமூக வழக்கங்கள், ஆன்மார்த்த அபிவிருத்தி முதலியவை ஏற்படாவண்ணம் செய்து பிற்காலத்தில் தேச சேவைக்கும் யோக்கியதை இல்லாதவர்களாகச் செய்துவிடுகிறார்கள். இத்தகைய உறுதியான எண்ணங்களை மனத்தில் வைத்துக் கொண்டே நான் என்மக்களுடன் எப்போதும் குஜராத்தியையே பேசி வந்தேன். ஸ்ரீ. போலக் இதை எப்போதும் விரும்பவில்லை. நான் அவர்களுடைய பிற்கால வாழ்க்கையைக் கெடுத்துக் கொண்டிருந்ததாகவே அவர் நினைத்தார். அவருக்கு அவர்களிடமிருந்த அன்பின் காரணமாக அவர்கள் ஆங்கிலத்தைப் போன்ற பொதுவான பாஷையில் தேர்ச்சி பெற்றால்தான் உலக வாழ்க்கையில் மற்றவர்களைக் காட்டிலும் வெற்றியுடன் வாழலாமென்று கருதியிருந்தார். ஆனால் எனக்கும் அத்தகைய உறுதி ஏற்படும்படி செய்ய அவரால் முடியவில்லை. அவர் என் அபிப்பிராயத்தைச் சரி என்று ஒப்புக்கொள்ளும்படி நான் செய்தேனா அல்லது நான் பிடிவாதக் காரனென்று அவர் விட்டுவிட்டாரோ என்பதைப்பற்றி நிச்சயமாகக்கூற எனக்கு இப்போது ஞாபகமில்லை. இவ்விஷயம் சுமார் இருபது வருஷங்களுக்கு முன் நடந்ததாகும். இப்போதும் என் அனுபவத்தில் என்னுடைய அந்தப் பழைய அபிப்பிராயமே உறுதியாக நிற்கின்றது. என் குமாரர்களுக்குக் கலாசாலைப் படிப்பு குறைவாகவே இருந்தபோதிலும் அவர்கள் இயற்கையாகக் கற்றுக்கொண்ட தாய் பாஷையை வைத்துக் கொண்டே அவர்கள் தாய் நாட்டுக்குச் செய்ய வேண்டிய கடமைகளையும் தங்களுக்கே செய்துகொள்ளவேண்டிய வேலைகளையும் செய்துகொண்டுதான் வருகின்றனர். மேலும் அவர்கள் தோற்றத்திலும் மேல் நாட்டார்களைப்போல் காணப்படுவதில்லை. அன்றியும் அவர்கள் ஆங்கிலத்தையே பிரதானபாஷையாகக் கொண்ட நாட்டில் வளர்ந்து வந்தபடியாலும், ஆங்கில நண்பர்களுடன்தாராளமாகக் கலந்து வாழ்ந்து வந்தபடியாலும் ஆங்கிலத்தைச் சுலபமாகவே பேசியும் எழுதியும் வருகிறார்கள்.